
பக்கங்கள்: 20

THEEMPUNAL
# தீம்புனல்
வாராந்தப் பத்திரிகை

தீ : 02 புனல்:06 04.06.2022 சனிக்கிழமை வள்ளுவர் ஆண்டு 2053



கடலரிப்பினால் மீனவர் கட்டடங்கள் சேதம்
பைஷல் இஸ்மாயில்
பக்கம் 06



சீரழிக்கப்படும் சின்னஞ்சிறுசுகள்
வர்மா
பக்கம் 08






# இணக்கத்தை உருவாக்க மறுக்கும் 21
## தடைபோடும் மொட்டுக் கட்சி

அ.நிக்சன்

பொருளாதார நெருக்கடி. விலைவாசி உயர்வுப் பிரச்சினைகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கும் நிலையில், ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்கள் சிலவற்றை பாராளுமன்றத்திற்குப் பாரப்படுத்துவது தொடர்பான 21 ஆவது திருத்தச் சட்டம், மேலும் பல சிக்கல் நிலைமைகளை உருவாக்கி வருகின்றது. மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜனப் பெரமுனக் கட்சி 21 தொடர்பாகப் பல்வேறு குழப்பமான கருத்துகளை முன்வைத்து வருகின்றமையே இதற்குக் காரணம்.

அதேவேளை, நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையை முற்றாக நீக்கவும் மூத்த சிங்கள அரசியல் தலைவர்கள் விரும்பவில்லை. அத்துடன் மகாநாயக்க தேரர்களும் உடன்படவில்லை. நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறை தொடர்ந்தும் இருந்தால் மாத்திரமே, வடக்குக் கிழக்கில் தமிழர்களின் அரசியல் விடுதலைக் கோரிக்கையைத் தடுக்கலாம் என்ற உணர்வு பௌத்த குருமார் மற்றும் சிங்கள முற்போக்காளர்கள் பலரிடமும் காணப்படுகின்றன.

21 தொடர்பாக ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் 13 ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள சில அதிகாரங்களை ரத்துச் செய்து, 21 இற்குள் இலங்கை ஒற்றையாட்சி முறையைப் பேணக்கூடிய பரிந்துரைகள் முன்மொழியப்பட்டு ஆலோசிக்கப்பட்டிருக்கிறது.

அத்துடன் ஜனாதிபதி ஆட்சி முறையை முற்றாக நீக்குவதில் மலையகத் தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகளுக்கும் பெரியளவில் உடன்பாடுகள் இல்லை. வடக்குக் கிழக்குத் தமிழ்த் தேசியக் கட்சிகளைப் பொறுத்தவரை, இது இலங்கை ஒற்றையாட்சி அரசியல் யாப்பு என்றே கருதுகின்றன.

வியாழக்கிழமை இடம்பெற்ற கூட்டத்தில் இந்த உணர்வுகள் பிரதிபலித்திருந்ததை அறியக் கூடியதாக இருந்தது.

சம்பந்தன் தலைமையிலான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி ஆகிய வடக்குக் கிழக்கு கட்சிகள் கூட்டத்தில் பங்குகொள்ளவில்லை.

நகல் வரைபில் ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்படவில்லையென தமிழரசுக் கட்சியின் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

எழுபது வருட இனப்பிரச்சினைக்குரிய தீர்வை முன்வைக்காமல் சிங்கள தேசம் தமக்குரிய அதிகாரங்கள் பற்றிப் பேசுகின்ற விடயங்களில் பங்குகொள்ள வேண்டிய அவசியம் இல்லையென தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏலவே கூறியுள்ளது.

இந்த நிலையில், இலங்கை அரசியல் யாப்பின் 21 ஆவது திருத்தச் சட்ட நகல் வரைபு தொடர்பாக, பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்கள் கூட்டம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கொழும்பில் நடைபெற்றது.

பிரதான எதிர்க்கட்சியான சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன,

▶19







வானதி

# ரஷ்யாவின் போர்க்குற்றங்களை விசாரிக்கிறது உக்ரைன்

உக்ரைனை ஆக்கிரமித்து ரஷ்யா நடத்தும் போரின் விளைவாக உக்ரைனின் முக்கியமான நகரங்கள் சேதமடைந்துள்ளன. இலட்சக் கணக்கான மக்கள் அகதியாகி விட்டனர். உக்ரைன் படையினரையும் மக்களையும் ரஷ்யத் துருப்புகள் கைது செய்துள்ளன. ரஷ்ய வீரர்களை உக்ரைன் படையினர் கைது செய்துள்ளனர். உக்ரைனில் கைது செய்யப்பட்ட ரஷ்ய வீரர்கள் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு தண்டனை வழங்கப்படுகிறது. இதேவேளை ரஷ்யாவின் போர்க்குற்றங்களையும் உக்ரைன் பட்டியலிடுகிறது.

ரஷ்யப் படையெடுப்பின் தொடக்கத்திலிருந்து உக்ரைனில் 15,000 க்கும் மேற்பட்ட சந்தேகத்திற்கிடமான போர்க்குற்றங்கள் பதிவாகியுள்ளதாக அந்நாட்டின் தலைமை வழக்கறிஞர் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய அமைச்சர்கள், இராணுவத் தளபதிகள், பிரச்சாரகர்கள் உட்பட 500 க்கும் மேற்பட்ட சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக இரினா வெனெடிக்டோவா கூறினார்.

மே 31, 2022 அன்று, நெதர்லாந்தின் ஹேக்கில், உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்புக்கு மத்தியில், கூறப்படும் போர்க்குற்றங்கள் பற்றிய விசாரணைகள் பற்றிய செய்தி மாநாட்டைத் தொடர்ந்து, ராய்ட்டர்ஸுக்கு அளித்த பேட்டியின் போது உக்ரைனின் உயர்மட்ட வழக்கறிஞர் இரினா வெனெடிக்டோவா இதனைத் தெரிவித்தார்.

500க்கும் மேற்பட்ட சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக இரினா வெனெடிக்டோவா தெரிவித்தார்

திருமதி வெனெடிக்டோவா ஹேக்கில் நடந்த செய்தியாளர் கூட்டத்தில், “ஒவ்வொரு நாளும் சுமார் 200-300 போர்க்குற்றங்கள் இழைக்கப்படுகின்றன” என்று கூறினார்.

உக்ரைனிய மற்றும் ரஷ்ய துருப்புக்களுக்கு இடையே கடுமையான சண்டை நடைபெற்று வரும் கிழக்கு டான்பாஸ் பகுதியில் சில ஆயிரம் போர்க்குற்றங்கள் நடந்ததாகக் கூறப்படுகிறது.

ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் உள்ள டான்பாஸ் பகுதிகளுக்கு உக்ரைனிய அதிகாரிகள் செல்ல முடியாது. என்றாலும், வெளியேற்றப்பட்டவர்களையும் போர்க் கைதிகளையும் அவர்கள் நேர்காணல் செய்தார்கள் என்று கூறினார்.



உக்ரைன் போர்: லுஹான்ஸ்க் மக்களின் வாழ்க்கை ‘நரகம்’ என்று ஆளுநர் கூறுவதால், ரஷ்யர்கள் இப்போது முக்கிய நகரமான செவெரோடோனெட்ஸ்கில் ‘சுமார் 70%’ கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளனர்.

மக்கள் சித்திரவதை செய்யப்பட்டனர், பொது மக்கள் கொல்லப்பட்டனர், குடிமக்களின் உள்கட்டமைப்பு அழிக்கப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்களை வழக்கறிஞர்கள் விசாரித்து வருகின்றனர்.

உக்ரைனிய குழந்தைகளையும் பெரியவர்களையும் ரஷ்யாவிற்கு வலுக்கட்டாயமாக அழைத்துச் செல்லப்படுவதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. புச்சா, பிற கீவ் புறநகர்ப் பகுதிகளில் உள்ள பொது மக்களைக் கொன்றதாக ரஷ்யப் படைகள் மீது குற்றம் சாட்டப்பட்டன, அத்துடன் நூற்றுக் கணக்கான பொதுமக்களுக்கு அடைக்கலம் அளித்து வந்த மருத்துவமனைகள் மற்றும் மரியுபோலில் உள்ள திரையரங்கம் உள்ளிட்ட உள்கட்டமைப்பு மீது மீண்டும் மீண்டும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

பொதுமக்களின் கட்டடங்கள் மீது ஷெல் வீசி போர்க்குற்றம் புரிந்ததாக குற்றம் சாட்டி இரண்டு ரஷ்ய வீரர்களுக்கு எதிராக விசாரணை செய்த உக்ரைனிய நீதிமன்றம் ஒருவருக்கு 11 வருடமும் மற்றையவருக்கு ஒன்றரை ஆண்டுகள் தண்டனையும் வழங்கப்பட்டு அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர்.

உக்ரைனில் நடந்த மோதலுடன் தொடர்புடைய முதல் தண்டனை கடந்த வாரம், பிடிபட்ட ரஷ்ய சிப்பாய் ஒரு குடிமகனைக் கொன்றதற்காக ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

பொதுமக்களைக் குறிவைப்பதையோ அல்லது போர்க்குற்றங்களில் ஈடுபடுவதையோ ரஷ்யா மறுத்துள்ளது.

லிதுவேனியா மற்றும் போலந்தையும் உள்ளடக்கிய உக்ரைனில் உள்ள சர்வதேச விசாரணைக் குழுவில் இணைய எஸ்டோனியா, லாட்வியா மற்றும் ஸ்லோவாக்கியா முடிவு செய்துள்ளதாக திருமதி வெனெடிக்டோவா கூறினார்.

உக்ரைனின் பிடியில் இருந்த கடைசி நகரங்களில் ஒன்றான செவெரோடோனெட்ஸ்க் நகரின் கட்டுப்பாட்டைக் கைப்பற்ற ரஷ்யர்கள் போராட லுஹான்ஸ்க் கிழக்குப் பகுதியில் உள்ள உக்ரைன் குடிமக்கள் தங்கள் உயிருக்கு அஞ்சுகின்றனர்.



அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், நாடு தன்னைத் தற்காத்துக் கொள்ள உதவுவதில் தனது உறுதிப்பாட்டை வலுப்படுத்தினார். எதிர்பார்க்கப்படும் $700m (+556m) ஆயுதப் பொதியின் ஒரு பகுதியாக இன்னும் மேம்பட்ட ராக்கெட் அமைப்புகள் மற்றும் வெடி மருந்துகளை அனுப்புவதாக அறிவித்தார்

நியூயோர்க் டைம்ஸில் ஒரு கருத்துக் கட்டுரையில், பைடன், “உக்ரைனுக்கு கணிசமான அளவு ஆயுதங்கள் மற்றும் வெடி மருந்துகளை அனுப்ப அமெரிக்கா விரைவாக நகர்ந்துள்ளது. எனவே, அது போர்க்களத்தில் போராட முடியும் மற்றும் பேச்சுவார்த்தை மேசையில் வலுவான நிலையில் இருக்க முடியும்” என்று கூறினார்.

ஆனால், நேட்டோவிற்கும் ரஷ்யாவிற்கும் இடையில் ஒரு போரை தாம் விரும்புவதில்லை என்று அவர் வலியுறுத்தினார்.

“புடினுடன் எனக்கு உடன்பாடு இல்லை, மற்றும் அவரது நடவடிக்கைகள் ஒரு சீற்றம் என்று கருதினால், மாஸ்கோவில் அவரை வெளியேற்ற அமெரிக்கா முயற்சிக்காது,” என்று அவர் கூறினார்.

Apple Podcasts , Google Podcasts, Spotify மற்றும் Speaker இல் உக்ரைன் போர் டைரிகளுக்கு குழு சேரவும் “அமெரிக்காவோ அல்லது நமது நட்பு நாடுகளோ தாக்கப்படாத வரை, உக்ரைனில் போரிட அமெரிக்கப் படைகளை அனுப்புவதன் மூலமோ அல்லது ரஷ்யப் படைகளைத் தாக்குவதன் மூலமோ நாங்கள் நேரடியாக இந்த மோதலில் ஈடுபட மாட்டோம் என்றும் அவர் தெரிவித்தார். ■

“அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்”

கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 0777 133 542
www.theempunal.lk
news@theempunal.com

தீம்புனல் THEEMPUNAL

# வரி உயர பொருட்களின் விலையும் உயரும்

**வரப்புயர நீர் உயரும்**
**நீர் உயர நெல் உயரும்**
**நெல் உயர குடி உயரும்**
**குடி உயர கோல் உயரும்**
**கோல் உயர கோன் உயர்வான்**
**- ஔவையார்**

பொருளாதாரச் சிக்கல், நிதி நெருக்கடி ஆகியவற்றால் தடுமாறும் இலங்கை அரசு வருவாயைப் பெருக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நிதி அமைச்சையும் தன்வசம் எடுத்துள்ளார். இடைக்கால பட்ஜெட்டைத் தாக்கல் செய்யப்போவதாக அவர் அறிவித்துள்ளார்.

இலங்கையில் மே மாதத்தில் பண வீக்கம் வரலாறு காணாத வகையில் 39.1% உயர்ந்துள்ளது. இதனால், பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்கும் விதமாக வரி விகிதம் உயர்த்தப்பட்டுள்ளது. அதன்படி, மதிப்பு கூட்டு வரி 8 சதவீதத்தில் இருந்து 12 சதவீதமாகவும் தொலைத் தொடர்பு வரி 11.25 சதவீதத்தில் இருந்து 15 சதவீதமாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

தனிநபர் வருமான வரி விலக்கு வரம்பு ஆண்டுக்கு 30 இலட்சத்தில் இருந்து 18 இலட்சமாக குறைக்கப்பட்டுள்ளது. பெரு நிறுவன வரி 24 சதவீதத்தில் இருந்து 30 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. இதேபோன்று கார்கள், இருசக்கர வாகன ரயர்களுக்கு விதிக்கப்படும் இறக்குமதி வரி 50 சதவீத அளவுக்கு உயர்த்தப்பட்டுள்ளது. ஏசி, வாஷிங்மிஷின், குக்கர், பிரிட்ஜ், செல்போன் போன்றவற்றிற்கான இறக்குமதி வரி 100 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளது.

இதன்மூலம் அரசுக்கு ரூ.1,395 கோடி அளவுக்கு கூடுதல் வருவாய் கிடைக்கும் என்றும் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாட்டின் நடுத்தர மற்றும் நீண்டகால பொருளாதார வளர்ச்சி நோக்கங்களை நிறைவேற்றுவதில் வரி உயர்வை செயல்படுத்துவது அவசியம் என்று பிரதமர் அலுவலகம் விளக்கமளித்துள்ளது.

கொரோனாவால் நாடு முடக்கப்பட்டது போது இரண்டு ஆண்டுகளாக இலங்கையின் பொருளாதாரம் கடும் இழப்பை சந்தித்தது. இலங்கையின் சுற்றுலா வருவாயைப் பெரிதும் நம்பியிருந்ததால் தீவிர வருவாய் பற்றாக்குறையைச் சந்தித்தது. அதன் காரணமாக விலைவாசி உயர்வு விண்ணை தொடும் அளவிற்கு உயர்ந்து அது உள்நாட்டு அரசியல் குழப்பமாக உருவெடுத்தது.

இலங்கையில் மதிப்புக்கூட்டு வரியை அதிகரிக்கப் போடப்பட்டுள்ள தீர்மானத்தைக் கண்டித்து தென் மாகாணத்தில் காலி நகரில் வியாபாரிகள் கடைகளை அடைத்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

காலி மாவட்டத்தைச் சேர்ந்த வியாபார சங்கத்தினரால் மேற்கொள்ளப்பட்ட இந்தப் போராட்டம் காரணமாக நகரில் வியாபார நடவடிக்கைகள் முழுமையாகத் தடைப்பட்டன.

இதுகுறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த காலி மாவட்ட வியாபாரிகள் சங்கத்தின் தலைவர் ஹேமந்த கமகே, பொது அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட மதிப்புக்கூட்டு வரி அதிகரிப்பு காரணமாக பொது மக்களும், வியாபாரிகளும் பெரும் சிரமத்தைச் சந்தித்துள்ளதாகத் தெரிவித்தார்.

இலங்கையில் 8 சதவீதமாகக் காணப்பட்ட மதிப்பு கூட்டு வரியை (வாட்) 12 சதவீதம் வரை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் அதிகரிக்க தீர்மானித்துள்ளதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது. அத்துடன், 11.25 சதவீதமாகக் காணப்பட்ட தொலைத்தொடர்பு வரியை 15 சதவீதம் வரை அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த வரி அதிகரிப்புக் காரணமாக அத்தியாவசியப் பொருட்கள் உட்பட அனைத்து பொருட்களின் விலைகளும் அதிகரித்துள்ளன. இதன் காரணமாக மக்களுக்கு பொருட்களை கொள்முதல் செய்யும் சக்தி வீழ்ச்சியடைந்துள்ளதாகத் தெரிவித்த ஹேமந்த கமகே, இதன் மூலம் வியாபாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இது அரசாங்கத்திற்கு எதிராக மேற்கொள்ளப்படும் ஒரு போராட்டம் அல்ல என்று கூறிய ஹேமந்த கமகே, இந்த வரி அதிகரிப்புக் காரணமாக மக்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகள் குறித்து கவனம் செலுத்துமாறு அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுப்பதாகவும் தெரிவித்தார்.

அனைத்துக் குழப்பங்களையும் தீர்ப்பதற்காக வாக்குறுதியளித்து ரணில் விக்கிரமசிங்க பிரதமரானார். குழப்பங்களும் தீர்க்கப்படாது, புதுப்புது குழப்பங்களும் வரிசை கட்டி வந்துகொண்டிருக்கிறது. பிரதமர் ரணிலின் தலைக்கு மேலே 21 எனும் கத்தி தொங்குகிறது. இவை எல்லாவற்றையும் சமாளிக்கும் ஆற்றல் ரணிலுக்கு இருக்கிறதா? என்பதை அறிய அரசியல் உலகம் ஆவலாக இருக்கிறது. ■

# உணவு நெருக்கடியை தீர்ப்பது எப்படி?

நாட்டில் உணவு நெருக்கடி ஏற்படும் அபாயம் காணப்படுவதாகக் குறிப்பிட்ட பிரதமர் ரணில் விவசாயத்திற்குத் தேவையான உரம் இல்லாமையினால் ஆகஸ்ட் மாதம் உணவு நெருக்கடிக்கு முகங்கொடுக்க நேரிடும் என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தற்போதைய நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்காக சர்வதேச சமூகத்தினர் இலங்கையுடன் கை கோர்த்துள்ளார்கள். அவர்களிடமிருந்து ஆரோக்கியமான பதில் விரைவில் கிடைக்கும் என்று ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார். நெருக்கடி நிலைமைக்கு முன்னைய நிர்வாகமே காரணம் என்றும் கூறினார். வெளிநாட்டு செய்தி நிறுவனமான ஸ்கைநியூஸூக்கு வழங்கிய பேட்டியொன்றில் இவ்வாறு பிரதமர் தெரிவித்தார். உண்மையிலேயே நாம் ஸ்திரமான நிலையில் இல்லை. விவசாயத்துக்கான போதிய உரம் இல்லை இதனால் எதிர்வரும் பருவகாலத்தில் முழுமையான விளைச்சல் கிடைக்காமல் போகும். இதன் காரணமாக ஆகஸ்ட் முதல் இலங்கையில் உணவு நெருக்கடிக்கான சாத்தியம் காணப்படுகிறது. எதிர்வரும் மார்ச் மாதம் வரையில் நாம் எவ்வாறு வாழ்க்கையைக் கொண்டுசெல்வது என்பதில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் தெரிவித்தார்.



இதேவேளை, உணவு நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கான குழுவொன்றை நியமிக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வர்த்தக அமைச்சர் நளீன் பெர்னாண்டோவுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார். வெற்றுக்காணிகளில் தோட்டம் செய்யும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதே வேளை வீணாக்கப்படும் உணவுப்பொருட்கள் பற்றி யாரும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை.

நாட்டின் பலாப்பழ உற்பத்தியின் நுகர்வு மிகவும் குறைவு என அமைச்சர் அமரவீர தெரிவித்துள்ளார். 280 மில்லியன் பலாப்பழங்களில் 80 மில்லியன் மட்டுமே வருடாந்தம் நுகரப்படுகிறது என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

பெரும்பாலான பலாப்பழங்கள் வீணாகின்றன, அதே நேரத்தில் பலர் பசியின் வேதனையை மந்தப்படுத்தப் போராடுகிறார்கள் மற்றும் கோஸ்நகர்ப்புற மற்றும் புறநகர் பகுதிகளில் விலை மிக அதிகமாக உள்ளது. பலாப்பழங்களை அறுவடை செய்யவும் சந்தைப்படுத்தவும் பதப்படுத்தவும் முறையான திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டால், பொதுமக்கள் பெரிதும் பயனடைவார்கள். வன காப்பகங்களில் பலாப்பழங்களை அறுவடை செய்ய பொதுமக்களுக்கு இலவசமாக தற்காலிக அனுமதி வழங்க வனத்துறை முடிவு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது. இது ஒரு நல்ல திட்டமாகத் தெரிகிறது, இது முறையாகச் செயல்படுத்தப்பட்டால், பல பசியுள்ள வாய்களுக்கு உணவளிக்கவும் உணவு வீணாக்கப்படுவதைத் தடுக்கவும் உதவும்.

உணவுப் பொருட்கள் வீணாவதைத் தடுக்க வேண்டும். அறுவடைக்குப் பிந்திய இழப்பை மிக அதிகமாகக் குறைக்க தீவிர முயற்சி எடுக்க வேண்டும். 270,000 மெட்ரிக் தொன் பழங்கள் மற்றும் காய்கறிகள் ஆண்டு தோறும் வீணடிக்கப்படுவதாகவும் இது அறுவடைக்கு பிந்தைய கழிவுகள் 30 சதவீதம் வரை அதிகமாக உள்ளது எனவும் பொதுக் கணக்குகளுக்கான குழு தெரிவித்துள்ளது.

இலங்கையில் வயது வந்தவர்களில் சுமார் 73% பேர் போதுமான அளவு காய்கறிகள் மற்றும் பழங்களை உட்கொள்வதில்லை மற்றும் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளிடையே ஊட்டச்சத்து குறைபாடு 21% ஐ எட்டியுள்ளது என்றும் பொது கணக்குக் குழு வெளிப்படுத்தியுள்ளது. எவ்வாறாயினும், அழிந்து போகும் பொருட்களின் கழிவுகளைக் குறைக்கவும் விவசாயி மற்றும் நுகர்வோருக்கு உதவவும் போக்குவரத்து, சேமிப்பு மற்றும் உணவு பதப்படுத்தும் வசதிகளை மேம்படுத்துவதில் அடுத்தடுத்த அரசாங்கங்கள் அக்கறை காட்டவில்லை.

உரம் உள்ளிட்ட இறக்குமதிப் பொருட்களுக்கு பணம் செலுத்த முடியாமல் நாடே பரிதவித்துக் கொண்டிருக்கும் வேளையில், உணவுப் பொருட்கள் வீணாவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ■

தீம்புனல் THEEMPUNAL

பி.மாணிக்கவாசகம்




# சமுதாய நாட்டின் சீர்கேடும்

யாழ்ப்பாணத்தில் ஒரு சம்பவம். சைக்கிளில் சென்ற முதியவர் ஒருவரிடமிருந்த இரண்டு இராத்தல் 'பாணை' (Bread) இரண்டு இளைஞர்கள் பறித்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர். அவர்களும் சைக்கிள் ஒன்றிலேயே வந்தனர் என்பதை இந்தச் சம்பவம் தொடர்பிலான சி.சி.ரி.வி காட்சிகள் காட்டி இருக்கின்றன. இந்தச் சம்பவம் பலரையும் திரும்பிப் பார்க்கச் செய்திருக்கின்றது. பல்வேறு உணர்வுகளுக்கு ஆளாக்கியிருக்கின்றது.

தனியாகச் செல்கின்ற பெண்களின் கழுத்துச் சங்கிலிகளை அறுத்துக் கொண்டு தப்பிச் செல்கின்ற மோட்டார் சைக்கிள் கொள்ளையர்கள் பற்றிய தகவல்கள் ஊடகங்களில் வெளிவந்திருக்கின்றன. இதையும்விட தனியாளாகப் பெருந்தொகைப் பணத்தை வங்கியில் இருந்து எடுத்துச் சென்றவர்களிடம் இருந்து அந்தப் பணத்தை அபகரித்துச் செல்கின்ற கொள்ளையர்கள் பற்றியும் நாமறிவோம்.

ஆனால், உணவுப் பொருளாகிய பாண் ஏழைகளின் பிரதான உணவை இவ்வாறு சைக்கிளில் வந்தவர்கள் அபகரித்துச் சென்றமை புதிய தகவலாக வெளிவந்திருக்கின்றது. இந்தச் சம்பவம் ஒரு வேடிக்கைக்காக நடைபெற்றதா அல்லது அந்த முதியவர் மீது ஏற்கெனவே கொண்டிருந்த கோபதாபங்களின் வெளிப்பாடாக இடம்பெற்றதா அல்லது உண்பதற்கு உணவில்லாத நிலையில் பசிக்கொடுமை காரணமாக அந்த இளைஞர்கள் அபகரித்துச் சென்றார்களா என்பது தெளிவற்றதாக உள்ளது. ஆனாலும் சி.சி.ரி.வி காட்சிகளில் காணப்பட்ட அந்த இளைஞர்களும் போஷாக்கற்றவர்களாக - வறுமையில் வாடுபவர்களாகவே காணப்படுவதாக அந்தக் காட்சிகளைப் பார்த்தவர்கள் கூறுகின்றனர்.

எப்படியிருப்பினும், இந்தப் பாண் அபகரிப்புச் சம்பவமானது மேலோட்ட நிலையில் நாட்டின் உணவுப் பற்றாக்குறையையும் உணவுப் பஞ்சம் குறித்த எச்சரிக்கையையும் உறுதி செய்வதாக அமைந்திருக்கின்றது.

குளிர்சாதனப் பெட்டியில் வைக்கப்பட்டிருந்த உணவுப் பொருட்களைக் கொள்ளையர்கள் வீட்டில் புகுந்து கொள்ளையடித்துச் சென்ற சம்பவம் ஒன்று பற்றிய தகவலும் வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள் என்பவற்றில் இருந்து பெற்றோல் களவெடுத்துச் செல்லப்பட்ட சம்பவம் பற்றியும் ஊடகங்களில் வந்த செய்திகள் குறித்த நினைவு வருகின்றது.

உணவு, எரிபொருட்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு, பொருட்களின் அபரிமிதமான விலையேற்றம் என்பவற்றின் விளைவாக இந்தச் சம்பவங்கள் இடம்பெற்றதாக அறிய முடிகின்றது. ஆனால், பாண் கொள்ளையிடப்பட்டமை நாட்டின் பொருளாதார நெருக்கடிகளின் உச்ச கட்டத்தை வெளிப்படுத்துவதாக அமைந்திருக்கின்றது. அத்துடன், உணவுப் பஞ்ச நிலைமை மற்றும் சமூக நிலைமைகளில் ஏற்பட்டுள்ள தாக்கம் என்பவற்றை ஒரு வகையில் வெளிச்சமிட்டுக் காட்டுகின்றது.

தேசிய பாதுகாப்பில் அதீத கவனம் செலுத்திய ஆட்சியாளர்களாகிய ராஜபக்ஷாக்கள், நாட்டின் அதிக முக்கியத்துவம் மிக்க உணவுப் பாதுகாப்பு குறித்து உரிய கவனம் செலுத்தவில்லை. ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ நாட்டின் டொலர் பற்றாக்குறையைச் சமாளிப்பதற்காக விவசாய உற்பத்தியைப் பலிக்கடாவாக்கினார். விவசாய உற்பத்திக்கும் நாட்டின் தேசிய தேவைக்கும் அவசியமாகிய இரசாயன விவசாய உள்ளீடுகளின் இறக்குமதியைச் சடுதியாகத் தடை செய்தார்.

இந்தத் தடையினால் விவசாயத் தேவைக்கு மிகவும் அவசியமாகிய யூரியா உள்ளிட்ட இரசாயன பசளைகள், களைகொல்லிகள், பீடைகொல்லிகள், விளைச்சலை அதிகரிக்கின்ற ஊக்குவிப்பு இரசாயனப் பொருட்கள் போன்றவற்றை விவசாயிகள் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை உருவாகியது. இரசாயன விவசாய உள்ளீடுகளுக்குப் பதிலாக சேதனப் பசளை முறையைக் கைக்கொள்ளுமாறு ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ விவசாயிகளுக்கு உத்தரவிட்டிருந்தார்.

சேதனப் பசளை உற்பத்திக்கான ஏற்பாடுகளை விவசாய திணைக்களம் மேற்கொண்டிருந்த போதிலும் அது விவசாயிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யப் போதுமானதாக அமையவில்லை. கடந்த 2021 ஆம் ஆண்டின் காலபோக நெல் விளைச்சல் 50 வீதம் வீழ்ச்சியடைவதற்கு இந்தத் தடை உத்தரவே காரணமாகியது. நாட்டின் உணவு மற்றும் அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகின்ற தேயிலை மற்றும் இறப்பர் உற்பத்திகளும் இதனால் பெரிதும் பாதிப்படைந்தன.

விவசாய இரசாயன உள்ளீடுகளை இறக்குமதி செய்வதற்குச் செலவிடப்பட்ட டொலர்களை மிச்சம் பிடிப்பதற்காக அவற்றின் இறக்குமதியைத் தடை செய்ததன் மூலம் நாடு நன்மை அடையவில்லை. மாறாக தேயிலை, இறப்பர் ஏற்றுமதி மூலமான டொலரின் வருவாயைப் பாதிப்பதற்கே வழிகோலியது. இந்தத் தடையினால் நாட்டின் நெல் உற்பத்தி வீழ்ச்சியடைந்தது. ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவின் முன்யோசனையற்ற நடவடிக்கை நாட்டு மக்களின் உணவுத் தேவைக்காக அரிசியை டொலர்களைச் செலவு செய்து இறக்குமதி செய்ய வேண்டிய நிலைமைக்கு அவரை இட்டுச் சென்றுள்ளது. கடந்த மாதக் கணிப்பீட்டின்படி உணவுப் பாதுகாப்புப் பணவீக்கம் 57 வீதமாக அதிகரித்திருக்கின்றது.

விவசாயத்தைப் பாதித்தது மட்டுமல்லாமல், ஏற்றுமதிப் பொருளாதாரத்தை விருத்தி செய்வதற்குப் பதிலாக இறக்குமதிப் பொருளாதாரத்திலேயே ராஜபக்ஷாக்கள் காலத்தைக் கழித்தனர். யுத்த வெற்றிமாயையில் உழன்றார்களே தவிர, யுத்தத்திற்காகப் பெறப்பட்ட கடன்களை மீளச் செலுத்துவதற்கான வழிமுறைகளிலும் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதிலும் கவனம் செலுத்தவில்லை. அதேவேளை, அதிகாரங்களை அதிகரித்துக் கொள்வதற்கும், குடும்ப அரசியலை நிறுவி மேம்படுத்துவதற்கும் முறையற்ற வழிகளில் செல்வத்தைச் சேகரிப்பதற்குமே அவர்கள் அதிக ஈடுபாடு காட்டினர்.

தொலைநோக்கற்ற தேசியப் பற்றற்ற ஆட்சியாளர்களின் நடவடிக்கைகளே நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்குலைத்து உணவுக்கும் எரிபொருளுக்கும் சாதாரண வாழ்க்கைக்கும் வழியற்ற நிலைமைக்கு நாட்டையும் மக்களையும் தள்ளியிருக்கின்றன. பொருட்களின் விலையேற்றத்திற்கு முக்கிய காரணமாகிய நாட்டின் பணவீக்கம் 29 வீதத்தில் இருந்து ஒரு மாத காலத்தில் 39 வீதமாக அதிகரித்திருக்கின்றது.

இதனால் அரசியல்வாதிகளிலும் பார்க்க அப்பாவிப் பொதுமக்களே பொருளாதாரச் சுமைகளைச் சுமக்கவும் துன்புறவும் பற்றாக்குறைகளுக்கு மத்தியில் அன்றாட வாழ்க்கைக்காக அல்லாடிக் கொண்டிருக்கின்றார்கள்.

பொருளாதார நெருக்கடிகளை உருவாக்கிய ஆட்சியாளர்களையும் அரசாங்கத்தையும் எதிர்த்துப் போராடுகின்ற நாட்டு மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதைப் போன்ற ஓர் அரசியல் பொருளாதார நிலைமைகள் உருவாக்கப்பட்ட போதிலும் சுயலாபத்திற்கான கட்சி அரசியல் நடவடிக்கைகளிலேயே ஆட்சியாளர்கள் மூழ்கிக் கிடக்கின்றனர்.

நாட்டையும் அரசு சார்ந்த அரசியல்வாதிகளையும் உலுப்பி உயிரச்சுறுத்தலுக்கு ஆளாக்கிய மே 9 நிகழ்வுகள் அரசியல்வாதிகளை நிதானிக்கச் செய்த போதிலும் அதன் பின்னரான நிகழ்வுகளின் தொடர்ச்சியில் அவர்கள் 'குளிர்விட்டுப்போன' நிலைமைக்கே திரும்பியிருக்கின்றார்கள்.

ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவின் அழைப்பையடுத்து, ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியை ஏற்றுக்கொண்டதையடுத்து, உருவாக்கப்பட்ட அரசாங்கம் பாதிக்கப்பட்ட மக்களின் அபிலாஷையை நிறைவேற்றவில்லை. ஆட்சி மாற்றம் வேண்டும் என்ற மக்களின் கோரிக்கைக்கு இடைக்கால அரசாங்கம் ஒன்றை நிறுவுவதே வழி எனப் பலரும் எதிர்பார்த்தார்கள். ஆனாலும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள அமைச்சரவையும் அரசாங்கமும் பலரும் எதிர்பார்த்திருந்த இடைக்கால அரசாங்கமாக அமையவில்லை. அனைத்து அரசியல் கட்சிகளையும் கொண்ட இடைக்கால நிர்வாக அரசாகவும் உருவாக்கப்படவில்லை. அது பழைய மொந்தையில் பழைய கள்ளாகவே அமைந்துவிட்டது.

பிரதமர் பதவியை ஏற்று அரசாங்கத்தை அமைக்குமாறு ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி கோரிய போது, தனிமனிதராக ஒரு கட்சியின் ஒரேயொரு பாராளுமன்ற உறுப்பினர் என்ற நிலைப்பாட்டிலேயே அவர் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். ஆட்சி அமைப்பதற்கு பிரதான எதிர்க்கட்சியாகிய ஐக்கிய மக்கள் சக்தி அவருக்கு உதவமாட்டாது என்பதைத் தெரிந்து கொண்டே அவர் பிரதமர் பதவியை ஏற்றுக்கொண்டார். ஜனாதிபதியும் அவரது சகோதரராகிய பிரதமரும், அவர்களுடன் அரசாங்கமும் ஒட்டுமொத்தமாகப் பதவி விலக வேண்டும். புதியவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்க வேண்டும் என்பதே, அரசுக்கு எதிராகப் போராடுபவர்களின் கோரிக்கை. மிகுந்த நம்பிக்கையோடு இந்த அரசாங்கத்தை ஆட்சியில் அமர்த்திய மக்கள் அரசு மீது நம்பிக்கை இழந்துவிட்டார்கள். பொருளாதாரத்தைச் சீர்குலைத்து, பிற நாடுகளிடம் நாட்டைக் கையேந்தும் நிலைக்கு இந்த ஆட்சியாளர்கள் கொண்டு வந்து விட்டார்கள் என மக்கள் ஆட்சியாளர்கள் மீது சீற்றம் கொண்டிருக்கின்றார்கள்.

(19 ஆம் பக்கம் பார்க்க...)

# ஆரோக்கியமும் ஆளும்வர்க்கமும் ஆளப்படும் மக்களும்!

**அவதானி**



இலங்கையில் ஆளும்வர்க்கத்தைச் சேர்ந்தவர்களும் அதற்கு எதிரான எதிரணி வர்க்கத்தைச் சேர்ந்தவர்களும் பணவசதி படைத்த செல்வந்தர்கள்தான். இதில் எந்தச் சந்தேகமும் இல்லை. அவர்களிடமிருக்கும் பணம், சொத்து, உடமைகள் குறித்து ஏற்ற இறக்கங்கள் இருக்கலாம். ஆனால், அவர்கள் வளமுடன் வாழ்பவர்கள். சிலர் அரசியலுக்கு வருமுன்னர் வைத்திருந்த செல்வத்தை, அரசியலுக்கு வந்த பின்னர் பெருக்கியிருப்பார்கள். வேறு சிலர் அரசியலுக்கு வந்த பின்னரே பெரும் செல்வந்தர்களாகியிருப்பார்கள். இன்னும் சிலர் செல்வந்தர்களாவதற்கே அரசியலுக்கு வருவார்கள். இவர்கள் தாம் தோற்றால், “பணநாயகம் வென்றது” என்பார்கள். வெற்றி பெற்றால், “ஜனநாயகம் வென்றது” என்பார்கள்!

தேர்தல் காலங்களில் பெரும்பாலான அரசியல்வாதிகள் பணத்தை வாரி இறைத்துச் செலவு செய்வதன் நோக்கமே, ஆட்சிப்பீடமேறியவுடன், செலவழித்தவற்றை வட்டியோடு மீளப்பெற்றுக்கொள்வதற்காகத்தான்.



ஆளும்வர்க்கத்துடன் இணைந்து பதவி சுகம் பெற்றால், சாதாரண மார்புவலி வந்தாலும் வெளிநாடு சென்று சிகிச்சை செய்வதற்கு வசதி வாய்ப்புகள் கிடைக்கும். சமகால ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவும் சிங்கப்பூருக்குச்சென்றுதான் தனக்கான இருதய சத்திர சிகிச்சை செய்துகொண்டு வந்தவர்.

அதன்பின்னரும் விசேட கவனிப்பிற்காகவும் மருத்துவ பரிசோதனைகளுக்காகவும் அங்கே அவ்வப்போது சென்று வருபவர். அவருடைய பதவிக் காலத்தில் மாற்றப்பட்ட முக்கியமான அமைச்சர்களில் சுகாதார நலத்துறை அமைச்சர்களும் அடங்குவர். முன்னாள் சுகாதார அமைச்சர் திருமதி பவித்ரா வன்னியாராய்ச்சியின் பதவி பறிக்கப்பட்டபோது, அவர் ஊடகவியலாளர்களுக்குச் சொன்ன கதையை ஏற்கெனவே அவதானி இந்தப் பத்தியில் எழுதியிருக்கிறார்.

‘கோட்டா கோ கம’ போராட்டம் தொடங்கி ஐம்பது நாட்கள் கடந்துவிட்டன. இக்காலப் பகுதியிலும் அதற்கு முன்னர் கொவிட் பெருந்தொற்றுக் காலப்பகுதியிலும் இந்த அரசு சில அமைச்சரவை மாற்றங்களைக் கண்டுவிட்டது.

தற்பொழுது சுகாதார அமைச்சராகவிருக்கும் கெகலிய ரம்புக்வெலவும் சில வருடங்களுக்கு முன்னர் அவுஸ்திரேலியாவுக்கு வந்தவிடத்தில் தாம் தங்கியிருந்த உல்லாச விடுதியின் மேல் மாடியிலிருந்து தவறிவிழுந்து, அங்குள்ள மருத்துவமனையில் பல நாட்கள் தங்கியிருந்து சிகிச்சை பெற்றவர்தான். அதன் பிறகும் விசேட மருத்துவ ஆலோசனைகளுக்காகச் சென்றவர்தான். இவ்வாறு இலங்கை அரசின் ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட அனைத்து அமைச்சர்களுக்கும் வெளிநாடு சென்று சிகிச்சை பெற்றுக்கொள்வதற்கான அனைத்து வரப்பிரசாதங்களும் மக்களின் வரிப்பணத்திலிருந்துதான் கிடைக்கின்றன.

ஆனால், இந்த ஆளும்வர்க்கத்தைப் பதவியில் அமர்த்தும் சாதாரண மக்களின் ஆரோக்கியம் குறித்து அமைச்சர்களும் முக்கியமாக சுகாதார அமைச்சரும் அவரது அமைச்சினைச்சேர்ந்த உயர் அதிகாரிகளும் அக்கறை செலுத்துகிறார்களா...? என்ற கேள்வி எழுகிறது.

தலைநகரில் மருத்துவக்களஞ்சியத்திலிருந்து பெருந்தொகையான மருந்துகள் பாவனைக்குதவாத நிலைக்குள்ளாகியிருக்கிறது. அவற்றின் பெறுமதி 625 கோடி 90 இலட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. நாடு பொருளாதார நெருக்கடியில் உச்சத்திலிருக்கும் இவ்வேளையில், இத்தகைய பாரிய நஷ்டத்தை ஏற்படுத்தக் காரணமாக இருந்த அக - புறக்காரணிகள் குறித்து சுகாதார அமைச்சு இதுவரையில் ஆராய்ந்திருக்கிறதா...? என்பது தெரியவில்லை!

நாட்டில் அத்தியாவசியமான மருந்துகளின் விலையேற்றத்தாலும் தட்டுப்பாட்டினாலும் உரிய சிகிச்சைகளைப் பெறமுடியாமல் திணறிக்கொண்டிருப்பவர்கள் ஏழைமக்கள். பல மருத்துவமனைகளில் சத்திர சிகிச்சைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. இந்தப்பின்னணிகளில்தான் பெருந்தொகையான மருந்துகள் முறையாகக் களஞ்சியப்படுத்தப்படாமல் வீணாகியிருக்கின்றன.

தற்போது சுகாதார அமைச்சராகியிருக்கும் கெகலிய ரம்புக்வெல, “மருந்து தட்டுப்பாடு பிரச்சினைக்கு இரண்டு மாதங்களில் தீர்வு கிடைத்துவிடும்” எனச்சொல்கிறார். இவ்வாறுதான் ஜனாதிபதி முதல் பிரதமர் வரையில் அமைச்சர்களும் நாள் குறித்து, பிரச்சினைகளுக்கு ஒத்தடம் தந்துகொண்டிருக்கின்றனர். இதேவேளை, “முறையான பொருளாதாரக் கட்டமைப்பு உருவாகாத வரையில் உலக வங்கி நிதியுதவி எதனையும் வழங்கமாட்டாது” என மாலை தீவு, நேபாளம், இலங்கை உள்ளிட்ட நாடுகளுக்கு நிதியுதவி வழங்கும் உலக வங்கியின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். இது அபாயச்சங்கு!

கடந்த மாதம் பதவியேற்ற புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் முடிந்தவரையில் உலக நாடுகளிடம் கையேந்திக்கொண்டுதானிருக்கிறார். புலம்பெயர்ந்து சென்ற இலங்கையர்களும் நாட்டுக்கு உதவவேண்டும் எனக்குரல் கொடுக்கிறார்.

அவரும், அவரது மாமனார் ஜே.ஆர்.ஜெயவர்தனவும் பதவியிலிருந்த 1977 - 1987 காலப்பகுதியையும் அவர் மீண்டும் திரும்பிப் பார்க்கவேண்டும். இக்காலப்பகுதியில்தான் மூன்று கலவரங்கள் வந்தன. 1977 - 1981 - 1983. அத்துடன் தென்கிழக்கு ஆசியாவிலேயே பிரசித்தியடைந்த யாழ்.பொது நூலகமும் அன்றைய அரசின் சீருடைக் காவலர்களினால் எரித்து நாசமாக்கப்பட்டது. அக்காலப்பகுதியில் நாட்டைவிட்டு வெளியேறிய ஈழத்தமிழர்கள் தங்கள் தாய் நாட்டுக்கு பல்வேறு வழிகளில் உதவுவதற்காக ஏராளமான தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை வெளிநாடுகளில் ஆரம்பித்து அவற்றின் மூலம் தாயகத்திற்கு உதவினார்கள். கல்வி, புனர்வாழ்வு, சுகாதாரம், மருத்துவ தேவைகள் உட்பட பல விடயங்களுக்கு உதவி வந்தார்கள். சுனாமி கடற்கோள் அனர்த்தம், கொவிட் பெருந்தொற்று வந்தபோதும் புலம் பெயர் உறவுகள் தம்மாலியன்ற உதவிகளை வழங்கினர்.

ஆனால், ஆளும்வர்க்கத்தினர் என்ன செய்தனர்...? அவர்கள் பதவி சுகத்துடன் சுருட்டிக்கொண்ட சொத்துக்களைப்பார்த்துவிட்டுத்தான்- தமது வயிற்றில் அடிவிழுந்தவுடன் மக்கள் கிளர்ந்து எழுந்திருக்கிறார்கள். இப்போது மீண்டும் புலம்பெயர் உறவுகள் உதவ வேண்டும் என்று புதிய பிரதமர் குரல் கொடுக்கிறார். தமிழக அரசும் இன, மத, மொழி பேதமின்றி உதவுவதற்கு முன்வந்து உலர் உணவுப் பொருட்கள் மற்றும் மருந்துவகைகளையும் வழங்கிவருகிறது.

அவ்வாறிருக்கையில், கைவசம் இருந்த மருந்துகளைக்கூட காப்பாற்றி வைத்துக்கொள்ளத் தெரியாமல், இலங்கையில் சுகாதார அமைச்சு மெத்தனமாக இருந்திருக்கிறதே...! இன்றைய பிரதமர் முன்னர் அமைச்சராகவிருந்த 1977 காலப்பகுதியில் திறந்த பொருளாதாரக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டதனால், உள்நாட்டு உற்பத்திகள் வீழ்ச்சியடைந்தன.

அன்று வடக்கில் வெங்காயம், மிளகாய், பயறு, உழுந்து முதலான உற்பத்தியில் விவசாயிகள் உச்சங்களைத் தொட்டிருந்தனர். அவர்களின் வயிற்றில் அன்று அடித்தவர்கள் இன்று வீட்டுத்தோட்டம் செய்யச் சொல்கிறார்கள். பயறு செய்கையில் ஈடுபடும் குடும்பங்களுக்கு நிவாரண உதவி வழங்கப் போகிறார்களாம்.

நல்லது. கண்கெட்ட பின்புதான் இலங்கை அமைச்சர்கள் சூரிய நமஸ்காரம் செய்வார்கள். முதலில் இந்த அமைச்சர்கள் தங்கள் அமைச்சின் செலவீனங்களைக் குறைக்கட்டும், அமைச்சின் பொறுப்பிலிருக்கும் திணைக்களங்களைக் கண்காணிக்கட்டும். அங்கெல்லாம் தொடர்ச்சியாக நேர்ந்துகொண்டிருக்கும் வீண் விரயங்களை முற்றாகத்தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கட்டும்.

தற்போது சுகாதார நலத்துறை அமைச்சராகியிருக்கும் கெகலிய ரம்புக்வெல முன்னர் ஊடகத்துறை அமைச்சராகவும் இருந்தவர்தான். மக்களின் தேவைகள், கோரிக்கைகள் குறித்தெல்லாம் இலங்கை ஊடகங்களில் வெளியாகும் ஆசிரியத் தலையங்கங்களை அவர் பார்ப்பதில்லையா...? ஒவ்வொரு அமைச்சிலும், ஊடகத்துறையை கவனிக்க ஒரு அதிகாரி இருப்பார். ஊடகங்களில் தமது அமைச்சு தொடர்பான செய்திகள் வரும்போதெல்லாம், அதனை அமைச்சரிடம் காண்பிக்கவேண்டியது அவரது பிரதான கடமை. அதனை அவர் சரியாகச்செய்கிறாரா...?

அண்மையில் 625 கோடி 90 இலட்சம் ரூபா பெறுமதியான மருந்துவகைகள் பழுதடைந்த செய்தியை அந்த சுகாதார அமைச்சரோ அல்லது அவரது அதிகாரிகளோ ஊடகங்களில் பார்த்தார்களா..,? என்ன நடவடிக்கை எடுத்தார்கள்...?

இந்தக்கேள்வியை முன்வைக்கின்றவேளையில் தான், சுகாதார அமைச்சர் “மருந்து தட்டுப்பாடு பிரச்சினைக்கு இரண்டு மாதங்களில் தீர்வு கிடைத்துவிடும்” எனச்சொல்கிறார். சரி. இரண்டு மாதங்களுக்கு பொறுத்திருப்போமா...? ■

# கடலரிப்பினால் மீனவர் கட்டடங்கள் சேதம்

**பைஷல் இஸ்மாயில்**



நிந்தவூரில் ஏற்பட்டுள்ள தொடர் கடலரிப்பின் காரணமாக, கடலோரத்தை அண்டிய கரையோரங்கள் பாதிக்கப்படுவதுடன், மீனவர்களின் வாடிகள், தென்னை மரங்கள் மற்றும் அவர்களின் பல்தேவைக் கட்டடங்களும் பாதிக்கப்பட்டு, நாளுக்கு நாள் கடலினால் ஆக்கிரமிக்கப்படுகின்றன.

இந்தத் தொடர் கடலரிப்பின் காரணமாக, மீனவர்கள் தங்கள் தொழிலை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், தங்களின் மீன்பிடி சம்பந்தமான விடயங்களைக் கலந்தாலோசித்துக் கொள்வதற்கும், அவைகளை சிறந்த முறையில் நிர்வகித்துக் கொள்வதற்கும் பல தடங்கல்கள் ஏற்படுத்தப்பட்டு தற்பொழுது அவர்கள் நடு வீதிக்கு வரும் துர்பாக்கிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இப்பிரதேசத்தில் தொடர் கடலரிப்பின் மூலமாக பல பாதிப்புகள் ஏற்பட்டிருந்த போதும், அது அரசியல்வாதிகள் மற்றும் அரச அலுவலகங்கள் மூலமாக சிறிது சிறிதாகவே நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருந்தது. நிந்தவூர் 9 ஆம் பிரிவு பிர்தௌஸ் ஜும்ஆ பள்ளிவாசலுக்கு முன்பாகவுள்ள மீனவர்களுக்குச் சொந்தமான மீனவர் சங்கக் கட்டடம் தொடர் கடலரிப்புக் காரணமாகக் கடலால் காவு கொள்ளப்பட்டுள்ளது. சுனாமியின் பின்னர் வெளிநாட்டு தொண்டு நிறுவனம் ஒன்றினால் இலவசமாக வழங்கப்பட்டது. இங்கு மீனவர்கள் தங்களது மீனவர் சங்க செயற்பாடுகளை முன்னெடுத்து வந்ததுடன், அதன் பிறகு நிந்தவூர் ஒன்பதாம் பிரிவு சனசமூக நிலைய கட்டடமாகவும் இயங்கி வந்தது. இதில் மீனவர்களின் கூட்டங்கள், வேறு சங்கங்களின் கூட்டங்கள் மற்றும் இதர நிகழ்வுகள் என்பன நாள்தோறும் நடைபெற்று வந்ததுடன் இந்தக் கட்டடத்தின் மேல் மாடியில் இப்பகுதி மீனவர்களின் மீன்பிடி உபகரணங்கள் என்பன பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளது.

மேலும், இக்கட்டடத்தில் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு தற்காலிகமாக பொலிஸ் நிலையம் இயங்கி வந்ததுடன், தற்போது மீனவர் தேவையுடன் கூடிய இப்பிரதேச சனசமூக நிலையமாகவும் இயங்கி வருகின்றது.

தொடர் கடலரிப்பின் காரணமாக ஒரு பகுதி கடலால் இழுத்துச் செல்லப்பட்டுள்ளது. இன்னும் மீதமாக இருப்பது இந்த இரண்டு மாடிக் கட்டடத்தின் ஒரு பகுதி மட்டுமேயாகும். இதுவும் இன்னும் ஓரிரு வாரத்தில் கடலினால் அள்ளுண்டு போகும் அபாய நிலையும் ஏற்பட்டுள்ளது.

இருந்தபோதும், கடந்த காலத்தில் இக்கட்டடம் அமைந்துள்ள பிரதேசத்தில் ஏற்பட்ட கடலரிப்பைத் தடுப்பதற்காக பாராளுமன்ற உறுப்பினர் பைசால் காசிமின் முயற்சியின் மூலம் கடலோர பாதுகாப்புத் திணைக்களத்தின் வழிகாட்டலுடன் தற்காலிகமாக மண்மூட்டைகள் நிரப்பப்பட்டு, பாதுகாக்கப்பட்டிருந்தாலும், கடல் அலைகளுக்கு அது தாக்குப்பிடிக்க முடியாமல் அள்ளுண்டு போனது.

ஆனால், இந்தப் பகுதியில் அமைந்துள்ள இந்தக் கட்டடத்தை நிரந்தரமாகப் பாதுகாப்பதற்கான எந்த நடவடிக்கைகளையும் நிந்தவூர் பிரதேச செயலகமோ அல்லது கரையோரப் பாதுகாப்பு திணைக்களமோ அல்லது இப்பிரதேச அரசியல்வாதிகளோ எடுக்கவில்லை.

இவ்வாறான நிலை தொடர்ந்து செல்லுமானால் கடைசியில் கடற்கரை வீதியினூடாகப் பயணம் செய்ய முடியாத துர்பாக்கிய நிலையும் நிந்தவூர் பிரதேசத்திற்கு ஏற்படும் என மக்கள் அஞ்சுகின்றனர்.

ஒலுவில் துறைமுகம் நிர்மாணிக்கப்பட்டதன் பிறகு, நிந்தவூர் பிரதேசத்தில் காணப்படுகின்ற அதிகமான கரையோரப் பிரதேசங்கள் கடல் அலையினால் காவு கொள்ளப்பட்டு இந்த நிலங்கள் இருந்த அடையாளமே தெரியாமல் போய்விட்டது. இதிலே இப்பிரதேச மக்களின் தென்னந்தோப்புகள், மீனவர்களின் மீனவ வாடிகள் என நீண்டு கொண்டே செல்கிறது.

இருந்தபோதும், இந்தத் தொடர் கடலரிப்பினால் நிந்தவூர் றவாஹா பள்ளிவாசலுக்கு முன்னால் அமையப்பெற்றுள்ள பிரதேசமும் கடலரிப்பினால் பாதிக்கப்பட, அன்றிருந்த பிரதேச செயலாளர் ரி.எம்.எம். அன்சாரின் முயற்சியின் விளைவாக, அதற்கு நிரந்தரமான தடுப்புச் சுவர்கள் அமைக்கப்பட்டு தற்போது அது பாதுகாக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், அடிக்கடி பல சிரமங்களைச் சந்திக்கும் நிந்தவூர் 9 ஆம் பிரிவு மீனவர்களுக்கு நிரந்தரப் பாதுகாப்பு வசதிகளை இன்னும் நிந்தவூர் பிரதேச செயலகமோ, அரசியல்வாதிகளோ அல்லது கரையோர பாதுகாப்புத் திணைக்களமோ ஏற்படுத்திக் கொடுக்கவில்லை.

எனவே, நிந்தவூர் கடற்கரைப் பிரதேசத்தில் இருக்கும் வளங்களையாவது பாதுகாப்பதற்கு இவர்கள் அனைவரும் முன்வர வேண்டும் என்பதுடன், குறிப்பாக நிந்தவூர் ஒன்பதாம் பிரிவில் அமையப்பெற்றுள்ள இந்த மீனவர் சங்க கட்டடத்தினைப் பாதுகாத்துத் தருமாறு இப்பிரதேச மீனவர்களும் பொதுமக்களும் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுக்கின்றனர். ■



# எலிசபெத்தின் 70 ஆவது பதவி ஏற்பு விழா



பிரிட்டன் ராணி எலிசபெத்தின் 70 ஆண்டு கால ஆட்சியை கௌரவிக்கும் வகையில் இங்கிலாந்து முழுவதும் உள்ள கிராமங்கள், நகரங்களில் ஆயிரக்கணக்கான கலங்கரை விளக்கங்கள் ஏற்றப்பட்டன. “ட்ரீ ஆஃப் ட்ரீஸ்” பிரதான கலங்கரை விளக்கின் தளமான பக்கிங்ஹாம் அரண்மனையில், அவரது பாட்டியை பிரதிநிதித்துவப்படுத்தும் கேம்பிரிட்ஜ் பிரபுவுடன், அரச குடும்பத்தின் மற்ற உறுப்பினர்களுடன், அவரது மாட்சிமை வின்ட்சர் கோட்டையில் உள்ள நாற்கரத்தில் இருந்து விழாவைத் தொடங்கினார்.

இங்கிலாந்து மற்றும் காமன்வெல்த் நாடுகளின் தலைநகரங்களில் 3,500 க்கும் மேற்பட்ட கலங்கரை விளக்கங்கள் ஒளிர குயின்ஸ் பிளாட்டினம் ஜூபிலி கொண்டாட்டங்கள் தொடர்கின்றன.

96 வயதான மன்னர் தனது வின்ட்சர் கோட்டை வீட்டில் இருந்து இரவு வானத்தை ஒளிரச் செய்வதன் மூலம் உலகக் கொண்டாட்டத்தை ஆரம்பித்து வைத்தார். ராணி தனது மூத்த மகன் இளவரசர் சார்லஸுடன் ஜூபிலி சேவைக்காக செயின்ட் பால்ஸுக்கு வரமாட்டார்.


வின்ட்சர் சிட்டாடலில், ராணி, ஒரு ஜாக்கெட், கையுறைகள் மற்றும் கண்ணாடிகளுடன், ஜூபிலியின் விளக்கங்களைத் தொடங்க நாற்கரத்தை அழுத்தினார்.

அவர் கோட்டையின் இறையாண்மை நுழைவாயிலில் இருந்து நாற்கரத்திற்குள் நடந்தபோது, ராணியை 100 க்கும் மேற்பட்டவர்கள் வரவேற்றனர்.

ஸ்கொட்லாந்தில் உள்ள ஹாட்ரியன்ஸ் சுவரில் உள்ள பீக்கன்களுக்கு நெருப்பிடம் ஏற்றி வைக்கும் வில்லாளர்களுடன் சேர்ந்து, தேசம் முழுவதும் உள்ள தனிநபர்கள் தங்கள் கலங்கரை விளக்கங்களை ஏற்றி வைத்தனர்.

லண்டன் டவர், வின்ட்சர் நைஸ் பார்க், ஹில்ஸ்பரோ சிட்டாடல், லம்பேத் அரண்மனை மற்றும் சாண்ட்ரிங்ஹாம் மற்றும் பால்மோரலில் உள்ள குயின்ஸ் எஸ்டேட்கள் ஆகியவற்றுடன், வரலாற்று சிறப்புமிக்க இணையத்தளங்களில் ஒன்றாக, 3,500க்கும் மேற்பட்ட பீக்கன்கள் ஒரே நேரத்தில் ஒளிர்ந்தன.

காமன்வெல்த்தின் 54 தலைநகரங்களில் நாள் முழுவதும் பீக்கன்கள் எரியும். ■



திருநாவுக்கரசு தயந்தன்
மூத்த பொறியியலாளர்

# சரிந்து கொண்டிருக்கும் ஒரு சரித்திரம் 24

எண்ணிக்கையில் சிறுபான்மைச் சமூகமாக இருந்தாலும் சாதிப்பதில் பெரும்பான்மையாக இருந்த சரித்திரங்களைக் கொண்டிருந்த சமூகம் எங்களுடையது! ஆனால் பல்வேறு உள்ளக வெளியக அரசியல், பொருளாதார, சமூகக் காரணிகளால் எங்கள் சமூகத்தின் கல்விச் சரித்திரங்கள் சரிந்து வருவது வெளிப்படை உண்மை! உண்மைகளை உணர்ந்து ஒன்றுபட்டு உழைத்தால் மீண்டும் பல சாதனை, சரித்திரங்களைப் படைக்க முடியும் என்ற நம்பிக்கையில் பல்வேறு காரணிகளை யதார்த்தமாக ஆராய்வதோடு நடைமுறைச்சாத்தியமான பரிந்துரைகளையும் தேவையான மாற்றங்களையும் விவாதிக்க இருக்கிறது இந்தக் கட்டுரைத் தொடர்! சுயவிருப்பு வெறுப்புகளைப் புறந்தள்ளி, நடுநிலைமையுடன் தொடரை வாசிக்குமாறும் பொருத்தமான களப்பணிகளிலும் செயற்பாடுகளிலும் இணையுமாறும் வாசகர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்!

-ஆசிரியர்

அத்தியாயம் - 14

**பகுதி - 01**





கடந்த பாராளுமன்றத் தேர்தலை முன்னிறுத்தி இந்தக் கட்டுரை எழுதப்பட்டு சில கட்சிகள் தங்கள் தேர்தல் அறிக்கைகளில் ஓரிரு விடயங்களை உள்ளடக்கியிருந்தாலும் பல்வேறு விடயங்களை ஆணித்தரமாக செய்யப்பட வேண்டியுள்ளது என்பதே நிதர்சனம்.

வடக்கு,கிழக்கு, மலையகப் பிரதேசங்களின் கல்வி மற்றும் பொருளாதாரத்தை வளர்க்கக்கூடிய முன்மொழிவுகளையும் உங்கள் தேர்தல் அறிக்கைகளில் உள்ளடக்கிக் கொள்ளுமாறு உங்களைப் பணிவோடு அழைக்கிறேன். ஓரிருவர் அவ்வாறான விடயங்களை முன்னெடுக்க ஏற்கெனவே முன்வந்திருந்தாலும் இன்னும் பலர் முன்வரவேண்டி உள்ளது. குறிப்பாக, வடக்குக் கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தி வெற்றி பெறும் வாய்ப்புடன் இருக்கும் அத்தனை அரசியல்வாதிகளும் வேட்பாளர்களும் நான் இங்கு பதிவிட இருக்கும் எமது பிரதேச கல்வி வளர்ச்சியை முன்னிறுத்திய பின்வரும் விடயங்களை ஒருமித்த மனதுடன் உங்கள் தேர்தல் அறிக்கைகளில் உள்ளடக்கிக் கொள்ள பணிவோடு அழைக்கிறேன். இவ்வாறான விடயங்கள் இதுவரை தமிழ் பேசும் அரசியல்வாதிகளின் தேர்தல் அறிக்கைகளில் பொதுவாக இடம் பெற்றதில்லை. ஆகவே இந்தமுறை, முதன் முறையாக வெறுமனே ஓட்டுக்களைக் குறிவைத்து மட்டும் இவற்றைத் தேர்தல் அறிக்கைகளில் சேர்க்காது, ஆத்மார்த்தமாக, உண்மையுடன் சேர்த்துக்கொள்ளுமாறு பணிவோடு வேண்டுகிறேன். மக்களும் கல்விச் சமூகமும் இவ்வாறான திட்டங்களுக்கு ஏகோபித்த ஆதரவைக் கொடுப்பார்கள் என்றும் நம்புகிறேன்.

தமிழர் பிரதேச அரசியல்வாதிகள், தமிழ் பேசும் மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கென, உங்கள் தேர்தல் விஞ்ஞாபனங்களில் உள்ளடக்கி செய்ய முயற்சிக்க வேண்டிய, செய்து முடிக்க வேண்டிய 10 வேலைத் திட்டங்கள்

1) கிராமிய ரீதியாக வாசிகசாலைகளை, சன சமூக நிலையங்களை, இணைய வசதியுடன் கூடிய படிப்பகங்களாக மாற்றுதல்.

இது கிராமிய ரீதியில், வீடுகளில் கற்றல் சூழல் குறைவாக, பொருத்தமற்றதாக இருக்கும் மாணவர்கள் தங்கள் சுயகற்றலைத் தொடர்ச்சியாகச் செய்ய பொருத்தமான சூழலை இவ்வாறான படிப்பகங்கள் ஏற்படுத்தி கொடுக்கும்.




என் முன்னைய கட்டுரைகளில் எழுதப்பட்டு வந்த இந்தத் திட்டம், அண்மையில் உள்ளூராட்சித் திணைக்களத்துக்கும் முன்மொழியப்பட்டுள்ளது. உள்ளூராட்சி ஆணையாளர், அதற்கான ஒத்துழைப்பை வழங்கவும் முன்வந்துள்ளார்.

ஆக மேற்கொண்டு முயற்சித்து வெற்றிகரமாக கிராமந்தோறும் இந்த மாற்றத்தை செயற்படுத்தி முடிக்க உதவுங்கள்!

2) தமிழ் மொழிமூல தேசிய கல்வி நிறுவனத்தின் உருவாக்கம்.

Institute of tamil mediam education( ITME).

இந்த நிறுவனம், தமிழ் மொழிமூல கற்கை தொடர்பான ஆய்வுகள், பயிற்சிகள், தமிழ் மொழிமூல கற்கைநெறிகள், கற்றல் கற்பித்தல் ஒருங்கிணைப்புகள் உட்பட பாடசாலையில் இருந்து விலகிய மாணவர்களுக்குத் தொடர்ச்சியான கற்றலை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளையும் முன்னெடுக்க முடியும்.

ITME இன் உருவாக்கம் ஏற்கெனவே Dr.எதிர்வீரசிங்கத்தால் சில காலம் முன்பே முன்மொழியப்பட்டிருந்தது (திட்ட வரைபு தேவையானவர்கள் தொடர்பு கொள்ளவும்). தொடர்ச்சியாக ராஜாங்க அமைச்சராக இருந்த திருமதி விஜயகலா மகேஸ்வரன் மூலமும் தன்னார்வலர் அமைப்புகள் முயற்சித்தும் பாராளுமன்றில் பிரேரிக்கக் கூடிய அளவு போதிய ஆதரவு கிடைக் காததால் வெற்றியளிக்கவில்லை.

## எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடும் தமிழ் வேட்பாளர்களே! தமிழ் அரசியல்வாதிகளே! இது உங்களுக்கான அழைப்பு!

ஆகவே, இந்தமுறை பாராளுமன்றம் செல்ல இருப்பவர்கள் கூட்டாக முயற்சிக்கலாம். தேசிய ரீதியில் தேவைகள் பல இருப்பதால் வெற்றிகரமாக இதை நடைமுறைப்படுத்தும் வாய்ப்புகள் அதிகம்.

**3.** தெற்கு பிரதேச மாகாணங்களில் உள்ள பாடசாலைகளில் இருந்து விலகிய மாணவர்களுக்கான தொழில்சார் கற்கை நெறிகள் தேசிய கல்வி நிறுவனத்தின் அனுசரணையுடன் பெரும்பாலும் சிங்கள மொழிமூலம் நடாத்தப்பட்டு பல சிங்கள மாணவர்கள் பயனடைந்து வருகிறார்கள்.(source: NIE Press release). இந்தக் கற்கை நெறிகளை தமிழர் பிரதேச மாணவர்கள் தமிழ் மொழி மூலம் கற்கும் வசதிகளை ஏற்படுத்தல்.

இதைப் புதிதாக அமைக்க உத்தேசிக்கும் தமிழ் மொழிமூல தேசிய கல்வி நிறுவனம் மூலமோ அல்லது ஏற்கெனவே உள்ள தேசிய கல்வி நிறுவனத்தின் (NIE) இன் கிளைகளை வடக்கு, கிழக்கு, மலையக பிரதேசங்களில் ஆரம்பிப்பதன் மூலமோ உடனடியாகச் செயற்படுத்தலாம்.

இந்த நிறுவனம், எமது பிரதேச மாணவர்களை மட்டுமன்றி, ஆசிரியர்களின் கற்றல் வினைத்திறனை தொடர்ச்சியாக அதிகரிக்கும் செயற்பாடுகளையும் முன்னெடுக்கும்.




4) வடக்கு, கிழக்கு பிரதேசங்களின் பட்டதாரி ஆசிரியர்கள் சதவீதத்தை குறைந்தபட்சம் தேசிய சராசரிக்கு ஏற்ப அதிகரித்தல்.

பட்டதாரி ஆசிரியர் வளப்பரம்பலை உறுதிப்படுத்தல்!

5) தமிழர் பிரதேசங்களில் எல்லா இடங்களையும் உள்ளடக்கி முன்பள்ளிகளை உருவாக்கல். பல இடங்களில் முன்பள்ளி வசதிகள் இல்லை. எல்லா முன்பள்ளிகளிலும் கற்றல் செயற்பாடுகளின் தரத்தை ஒரு பாலர், முன்பள்ளி கல்வி நிறுவனம்/ மாகாணக் கல்வி அமைச்சின் கிளை (seperate department) மூலம் உறுதிப்படுத்தல். இது ஆரம்பக் கல்வியில் உள்வாங்கப்படும் மாணவர்களின் கற்றல் விருத்தியை வெகுவாக அதிகரிக்க உதவும்.

**6.** பொருளாதாரப் பிரச்சினைகளால் இடைவிலகலுக்கு உள்ளாகும், கல்வியில் பின்தங்கும் மாணவர்களை இனங்கண்டு கல்வியில் மேம்படுத்த கிராமிய அடிப்படையில் கல்வி மேம்பாட்டுக் குழுக்களை உருவாக்கல். இதை கட்சிகளின் அடிப்படையிலோ அல்லது பிரதேச செயலகம், பிரதேச சபை ஊடாகவோ செய்ய முயற்சிக்கலாம் அல்லது சுயாதீன கல்வி மேம்பாட்டுக் குழுக்களையும் அமைக்கலாம்.

7) வடக்கு, கிழக்கின் ஒவ்வொரு பாடசாலைக்கும் சகல இணைய வளங்களுடன் கூடிய குறைந்தபட்சம் 1 - smart classes ஏற்படுத்துதல்.

இணைய வசதி இல்லாத பாடசாலைகளுக்கு இணைய வசதிகளை ஏற்படுத்தல்.

இது அசாதாரண சூழ்நிலையிலும் ஆசிரியர் வளம் குறைவாக உள்ள நிலையிலும் மாணவர்கள் இணைய வளங்கள் மூலம் தொடர்ச்சியான கற்றலை மேற்கொள்ள உதவும்.

8) ஆசிரியர் இடமாற்றங்களில் அரசியல், சுயலாப தலையீடுகள் இல்லாமல் நேர்மையான முறையில் இடமாற்றங்கள் மற்றும் ஆசிரிய வளப்பரம்பல்கள் நடைபெறுவதை ஊக்குவித்தல்.

அவ்வாறான தலையீடுகளை மேற்கொள்ளும் அரசியல்வாதிகள், உறுப்பினர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல்.

9) ஆய்வு கூடங்கள்/ நூலகங்கள் இல்லாத பாடசாலைகளை இனங்கண்டு அந்தப் பாடசாலைகளுக்கு அந்த வளங்களைப் பெற்றுக்கொடுத்தல்.




வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் மிகவும் பின்தங்கியுள்ள விஞ்ஞான, வரலாறு பாட அடைவு மட்டங்களை அதிகரிக்க இது உதவும்.

10) வடக்கு கிழக்கு பிரதேச கல்வியின் அடைவு மட்டங்களை அடுத்த 5 வருடங்களுக்குள் தேசிய சராசரியை விஞ்சி முன்னேற்றிச் செல்ல அனைத்துத் தரப்புகளையும் உள்ளடக்கி, ஏற்கெனவே வடமாகாண சபை கல்வி அமைச்சின் NESR அறிக்கை போன்ற ஆய்வுகள் மூலம் முன்மொழியப்பட்ட முன்மொழிவுகளையும் கருத்தில் எடுத்து, ஒரு நீண்ட காலத் திட்டமிடலை மேற்கொண்டு அந்தப் பயணத்தில் உறுதுணையாக நின்று ஆதரவு கொடுத்தல்/ செயற்படுத்துதல். இதில் ஒரு அங்கமாக, தேசிய ரீதியாக தமிழ் மொழிமூல பாடங்களுக்கான வெட்டுப்புள்ளிகள் தீர்மானிக்கப்படும் நேர்மையான வழிமுறைகளையும் பாராளுமன்ற கேள்விகள் மூலம் உறுதிப்படுத்தல்.

தயவு செய்து இந்த 10 முன்மொழிவுகளையும் உங்கள் தேர்தல் அறிக்கைகளில் உள்ளடக்கிக் கொள்ளுமாறும் இது தவிர கல்வி தொடர்பான வேறு முன்மொழிவுகளையும் தாராளமாக உள்வாங்கிக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

மேற்படி முன்மொழிவுகள் தொடர்பாக மேலதிக தகவல்கள் தேவைப்படின் துறை சார்ந்த அமைப்புகளும் நானும் தயாராக இருக்கிறோம்.

பிற்குறிப்பு: இந்த முன்மொழிவுகள் அனைத்து தமிழ் வேட்பாளர்கள், அரசியல்வாதிகளுக்குக் கிடைக்கும் வகையில் பகிர்ந்து உதவும்! அல்லது உங்களிடம் வாக்குக் (vote) கேட்டு வரும் வேட்பாளர்களுக்கு இவற்றைக் கொடுத்து உதவுங்கள்!



வர்மா

# சீரழிக்கப்படும் சின்னஞ்சிறுசுகள்

இலங்கையின் எதிர்காலம் எப்படி இருக்கப்போகிறது என்ற கவலை ஒருபுறம். அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு, அவற்றைப் பெறுவதற்கான நீண்ட வரிசை, அரசுக்கெதிரான போராட்டம் போன்றவை இன்னொரு புறம் இருக்க சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய செய்திகளும் ஊடகங்களில் முதன்மைப்படுத்தப்படுகின்றன.

சிறுவர்கள் எனப்படுபவர்கள் 18 வயதுக்கு குறைந்தவர்கள் ஆவர். 1989 களில் சிறுவர் உரிமைகள் ஐக்கிய நாடுகள் சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்டது. அவற்றுள் வாழ்வதற்கான உரிமை, வளர்ச்சிக்கான உரிமை, பாதுகாப்பு உரிமை, பங்கேற்பதற்கான உரிமை, கல்விக்கான உரிமை எனப் பொதுவான உரிமைகள் காணப்படுகின்றன. இவற்றின் அடிப்படையில் சிறுவர்கள் பாதுகாக்கப்படவேண்டும். இவற்றினைப் பின்பற்றி அரச சட்டங்கள் அமைய வேண்டும். சிறுவர் துஷ்பிரயோகங்களில் ஈடுபடுபவர்கள் சட்டத்தின் முன் தண்டிக்கப்படவும் வேண்டும்.

சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல், போதைக்கு அடிமையாக்கல், பாலியல் துஷ்பிரயோகங்கள் போன்றவற்றில் ஈடுபடுவது தண்டனைக்குரிய குற்றமாகும். இருப்பினும் அதிகாரிகளின் கவனயீனம், மிருகத்தனமான பெற்றோர்கள் போன்றவர்களால் சிறுவர்கள் அதிகம் பாதிக்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள் என்பது வேதனைக்குரியது.

சிறுவர் உரிமைகள் மீறப்படுகின்ற ஒரு தேசம் அழிவினை நோக்கிச் செல்கின்றது என்பது வெளிப்படை. எதிர்கால கதாநாயகர்களாக உருவாகப் போகும் சிறுவர்கள் சிறுவயது முதலே பல கனவுகளை மனதில் சுமப்பார்கள் அவர்களது கனவுகளை மெய்படுத்துவதாக பெற்றோர்களும் ஆசிரியர்களும் அரசாங்கமும் இருக்க வேண்டும்.

சிறுவர்கள் அன்பாகவும் பண்பாகவும் நடாத்தப்படும் போதுதான் அவர்களும் வன்முறைகளற்ற நற்பிரஜைகளாக உருவாகுவர். ஆனால், இன்று சில நாடுகளில் சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்லாது வேலைக்கு அமர்த்தப்படுவதும் சட்டவிரோத தொழில்களில் ஈடுபடுவதும் பாலியல் அடிமைகளாக்கப்படுவதும் சிறுவர் போராளிகளாக்கப்படுவதும் உலகமெங்கும் நடந்தேறத்தான் செய்கிறது. இது அவர்களது வாழ்வை சீரழிப்பதோடு வன்முறை மிகுந்த சமுதாயத்தை உருவாக்குவதுடன் உலகத்தையே உருக்குலைக்கவல்லது.

இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் என்பார்கள். சிறுவர் மீதான வன்முறை, பாலியல் தொல்லை என்பனவற்றுக்கு உறவினர்களும் நண்பர்களும்தான் முக்கிய காரணமாக உள்ளனர். சில இடங்களில் ஆசிரியர்கள் வரம்பு மீறுகிறார்கள். கடந்த இரண்டு வாரங்களாக இலங்கை ஊடகங்களிலும் சமூக வலைத்தளங்களிலும் சிறுமிகள் பற்றிய செய்திகள் பரபரப்பாகப் பகிரப்பட்டன.

சிறுமியைக் காணவில்லை என்ற செய்தி வெளியானது. அந்தச் சிறுமியைத் தேடி உறவினர்கள் நொந்துகொண்டிருக்கையில் அதிக கற்பனையுடன் சில தகவல்கள் பகிரப்பட்டன. காணாமல் போன சிறுமி சடலமாக மீட்கப்பட்ட பின்பு தேவையற்ற கற்பனையுடன் பதிவேற்றினர்.

சிறுமி கொலைச் சம்பவத்தில் கைதான சந்தேக நபர் போதைவஸ்துக்கு அடிமையானவர். அவர் ஏற்கெனவே வீடு புகுந்து பாலியல் வல்லுறவு முயற்சியில் ஈடுபட்டவர் என பாதிக்கப்பட்ட முன்பள்ளி ஆசிரியை ஒருவர் கூறியிருக்கின்றார்.

இந்தச் சம்பவம் கடந்த பெப்ரவரி மாதம் பதிவாகியுள்ளது. இது தொடர்பில் பாதிக்கப்பட்ட பெண் தெரிவிக்கையில், "நான் முன்பள்ளி ஆசிரியராகப் பணிபுரிந்து வந்தேன். நான் எனது இரண்டு பிள்ளைகளுடன் வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த வேளையில் அவர் என் வீட்டிற்குள் வந்து தகாத முறையில் நடந்துகொள்ளமுயன்றார். அப்போது நான் கூச்சலிட்டதை அடுத்து சந்தேக நபர் உடனடியாக வீட்டிலிருந்து தப்பித்து ஓடிவிட்டதாகவும் தெரிவித்த அப்பெண், பின்னர் சம்பவம் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்தும் பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என பாதிக்கப்பட்ட பெண் தெரிவித்துள்ளார்.

மேலும், அப்போதே பொலிஸார் சம்பவம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்திருந்தால் பாத்திமாவுக்கு இப்படியொரு கதி வந்திருக்காது என்றும் அப்பெண் மேலும் கூறியதாக கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மதுபோதையில் இருந்த தந்தை, யாருக்கும் சொல்லாமல் ஏன் வீட்டுக்கு வெளியில் சென்றாய் எனக் கேட்டு, மகளை இரும்புக் கம்பியினால் தாக்கியதால் மரணமானார். வயிற்றுவலிக்காக வைத்தியசாலைக்குச் சென்ற 13 வயது சிறுமி கர்ப்பிணி என தெரிய வந்தது. வவுனியாவில் ரியூசனுக்குச் சென்ற சிறுமி கிணற்றில் இருந்து சடலமாக மீட்பு. இவை எல்லாம் வெறும் செய்திகள் அல்ல. சீர்கெட்ட சமுதாயத்தின் வெளிப்பாடுகள். சட்டம் தன் கடமையைச் செய்யாததும் இந்தச் சமூக சீர்கேட்டுக்குக் காரணமாகும்.

சிறுவர்கள் மிகவும் பாதுகாப்போடு வளரக்கூடிய சூழலை எந்த ஒரு நாடு கொண்டிருக்கிறதோ அந்த நாடுதான் உலகின் மிகச் சிறந்த நாடாகும். ■



# ஜூன் 09 பிறந்ததினம் கொண்டாடும் பேராசிரியர் மௌனகுருவின் இரண்டு நூல்கள்

## கூத்தே உன் பன்மை அழகு - கூத்த யாத்திரை

● முருகபூபதி

"ஈழத்தமிழ் நாடக மரபு ஆறாத்தொடர்ச்சி உடையது. அதில் தத்தம் பங்களிப்புச் செய்தோரினால் அம்மரபு மேலும் செழித்து வளர்ந்துள்ளது. தம் முன்னோரின் தோளின் மீது நின்றுதான் அடுத்த நாடகத் தலைமுறை உலகை பார்க்கிறது. தன்னைத் தாங்கி நிற்பவரின் பார்வைப் புலத்திற்கு தெரியாத பல காட்சிகள் மேலே நிற்பவரின் கண்களுக்குத் தெரிய வாய்ப்புண்டு. கீழே தாங்கி நிற்பவர்கள் அனுபவம் மிகுந்தவர். அவர்களின் அனுபவம் என்ற அத்திவாரத்தில்தான் இளைய தலைமுறை நிமிர்ந்து நிற்கிறது. இவ் இருவர்களும் பிரதான மாணவர்களே. இந்த இருவரிடையேயும் வளரும் "கொண்டு கொடுத்தல்" உறவு இருவரையும் வளர்க்கும் "இவ்வாறு ஈழத்து தமிழ் அரங்கத்துறையில் காத்திரமான பங்களிப்பினை வழங்கி வரும் பா. நிரோஷனின் அரங்க ஆளுமைகள் நால்வர் என்ற நேர் காணல் தொகுப்பு நூலுக்கு வாழ்த்துரை கூறியிருக்கும் பேராசிரியர் மௌனகுரு எழுதியிருக்கும் கூத்த யாத்திரை (நான் கொண்டதும்



கொடுத்ததும்), கூத்தே உன் பன்மை அழகு ஆகிய இரண்டு நூல்களும் மேற்குறித்த அவரது கருத்தை மேலும் வலுச்சேர்க்கும் வகையில் விரிந்த தளத்தில் பேசுகின்றன.

கால ஓட்டத்தினூடே மாறிவந்த கூத்து பற்றிய அவரது கருத்தியலையும் செயற்பாடுகளையும் பற்றிப் பேசுகிறது கூத்தே உன் பன்மை அழகு.

அவரது இளமைப் பராயம் முதல் அவர் கூத்துக்கலைக்கு அறிமுகமான பின்னணியையும் கூத்து அனுபவங்களையும் வாழ்வில் கண்டு மகிழ்ந்த கூத்துக்கலைஞர்கள் பற்றியும் தனக்கு கூத்தறிவூட்டிய அண்ணாவிமார்கள், ஆசிரியர்கள் பற்றியும் விளக்குகிறது கூத்த யாத்திரை என்ற நூல்.

பேராசிரியர் மௌனகுரு, ஈழக்கூத்து மற்றும் நாடக அரங்கியல் துறைகளில் சாதனைகள் பல புரிந்தவர். தான் கற்றதையும் பெற்றதையும் இந்நூல்களில் பதிவுசெய்திருக்கிறார்.

அத்துடன், இந்தத் துறைகள் மாத்திரமல்ல, வேறு எந்தவொரு துறையும் அஞ்சலோட்டத்திற்கு நிகரானது என்பதையும் நிறுவுகின்றார்.

நாம் பார்க்கும் சினிமாவின் ஊற்றுக்கண்ணே கூத்துதான். கூத்திலிருந்து நாடகமும், நாடகத்திலிருந்து சினிமாவும் வளர்ந்திருக்கின்றன.

" எல்லாமே மாறிக்கொண்டிருக்கின்றன என்பது இயற்கையின் இயங்கியல் ஆகும். இந்த இயங்கியல் கொள்கையில் நம்பிக்கையுடைய நான் எதனையும் அந்த இயங்கியல் நோக்கில் புரிந்துகொள்ள முயல்கிறேன்." என்று கூத்தே உன் பன்மை அழகு நூலின் முன்னுரையில் மௌனகுரு பதிவுசெய்கின்றார்.

அத்துடன் தான் கூத்துக்கலை தொடர்பாக எழுதும் கட்டுரைகளைத் தனது நண்பர்களிடமும் மாணவர்களிடமும் கொடுத்து கருத்துக்கேட்கும் பழக்கத்தையும் இயல்பிலேயே கொண்டிருப்பவர் என்ற தகவலையும் அறிகின்றோம்.


அதனால், அவரால் இத்துறை சார்ந்து இயங்கும்போதும் எழுதும்போதும் செம்மைப் படுத்தலுக்கும் தயாராகின்றார். இந்தப்பண்பு ஏனையோருக்கும் முன்மாதிரியானது.

அவரது பல்கலைக் கழகப்பணி 2009 ஆம் ஆண்டுடன் ஓய்வுக்கு வருகிறது. எனினும், இந்த மகா கலைஞனிடமிருந்து கூத்தோ, நாடகமோ செய்யும் வாய்ப்பு அவருக்கு அங்கே கிடைக்கவில்லை என்பதும் தெரிகிறது. அவ்வாறிருந்தால் என்ன...? கடல் அலை ஓய்ந்தாவிடும். இது கலைக்கடல்...!

அவர் அரங்க ஆய்வு கூடத்திலும் சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் பக்கமும் தனது இயக்கத்தை தொடருகிறார். அத்துடன் கூத்துக்கலை பற்றிய கடந்த கால அனுபவங்களையும் தனது தொடர் யாத்திரையையும் எழுதிக்கொண்டிருக்கிறார்.

அதன் பெறுபேறாகவே இந்த இரண்டு நூல்களும் வரவாகியிருக்கின்றன.


மௌனகுரு அவர்களின் இராவணேசன் கூத்து இலங்கையில் மாத்திரமல்ல இலங்கை, இந்திய, சிங்கப்பூர், மலேசியத் தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் பல உலக நாடுகளிலும் பிரசித்தமானது.



கூத்தே உன் பன்மை அழகு நூலில், தனது தொடர் கூத்தில் மேற்கொண்ட பணிகளை இவ்வாறு வகைப்படுத்தியிருக்கிறார்.

01.புதிய முறையில் இராவணேசன் - வடமோடி, 02.புதிய முறையில் நொண்டி நாடகம் - தென்மோடி, 03. புதிய முறையில் காண்டவ தகனம் - வடமோடி, 04. புதிய முறையில் இமயத்தை நோக்கி - வடமோடிக் கூத்து கலந்த நாடகம், 05. புதிய முறையில் 'தோற்றம்' நாடகம் - வடமோடிப்பாணி, 06. மண்ணோக்கிய வேர்களும் விண்ணோக்கிய கிளைகளும் 07.புதிய முறையில் மட்டக்களப்பு கூத்தின் பரிமாணம், 08. மனம் மாறிய மன்னர்கள் - வடமோடிக் கூத்து மீளுருவாக்கம், 09. கூத்தும் பரதமும் 10. கூத்து கச்சேரி செய்ய நினைத்திருக்கும் மீளுருவாக்கம் முதலான தலைப்புகளில் எழுதியிருக்கும் அவர், சகல ஈழத்து கூத்து ஆடல்களையும் இணைத்து ஈழத் தமிழருக்கான புதியதோர் தேசியத் தமிழ் கூத்தை உருவாக்குதல் பற்றி சிந்திக்கின்றார்.




கூத்த யாத்திரை நூலை அவர் கதைசொல்லியாக விவரித்திருக்கிறார். இந்நூலின் இறுதியாக இடம் பெறும் "நந்தவனத்திற்கு அழகு பல்வகைப் பூக்களே. கால ஓட்டத்தினூடே கூத்து பற்றிய எனது கருத்தியலும் செயற்பாடுகளும்" என்ற தலைப்பில்தான் கண்டடைந்த திசையைக் காண்பிக்கின்றார்.

ஈழத்தின் கூத்து மரபு மாறிவந்திருக்கும் கோலங்களை இந்த நூல்களின் வாயிலாகத் தெரிந்துகொள்கின்றோம்.

இம்மாதம் (ஜூன்) 09 ஆம் திகதி பேராசிரியர் மௌனகுரு அவர்களுக்கு 79 வயது. அவருக்கு பிறந்ததின வாழ்த்துக்கூறும் இச்சந்தர்ப்பத்தில், அவரது இரண்டு முக்கிய நூல்கள் பற்றிய அறிமுகக்குறிப்புகளை எழுதநேர்ந்ததும் தற்செயலானது.

இரண்டு நூல்களையும் கொழும்பு குமரன் புத்தக இல்லம் வெளியிட்டிருக்கிறது. ■

# பாட்டாளி மக்கள் கட்சியின் மாற்றத்தை நோக்கிய பயணம்

சிலம்பு

சத்தம் சந்தடி இல்லாமல் தன் மகன் அன்புமணிக்கு முடிசூடியுள்ளார். டாக்டர் ராமதாஸ் மாற்றம், முன்னேற்றம் அன்புமணி என்ற கோஷத்துடன் தமிழக ஆட்சியைப் பிடிக்க சபதம் செய்தவர் கட்சியின் தலைவராகி விட்டார்.

வன்னியர்களின் உரிமைக்காக இயக்கத்தை ஆரம்பித்த டாக்டர் ராமதாஸ் காலப்போக்கில் அதனை அரசியல் கட்சியாக்கினார். தனது குடும்பத்தைச் சேர்ந்த எவரும் அரசியலுக்கு வரமாட்டார்கள் என அப்போது சபதம் செய்தார். மகன் அன்புமணி எம்.பியாகி, பின்னர் அமைச்சரானார். இன்று மகனுக்கு முடிசூடி செங்கோலைக் கையில் கொடுத்துள்ளார்.

சென்னை திருவேற்காட்டில், பாட்டாளி மக்கள் கட்சியின் மாநில சிறப்புப் பொதுக்குழுக் கூட்டத்தில் அந்தக் கட்சியின் இளைஞரணித் தலைவராக இருந்த அன்புமணி ராமதாஸ் கட்சியின் தலைவராக அறிவிக்கப்பட்டார்.



பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் பதவியை 25 ஆண்டுகள் அலங்கரித்த நிலையில், தமிழக அரசியலில் பாட்டாளி மக்கள் கட்சியை அடுத்த நிலைக்கும், ஆட்சிப் பொறுப்புக்கும் அழைத்துச் செல்லும் வகையில், பாட்டாளி மக்கள் கட்சி 2.0 என்ற செயல் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றும் வகையில் கட்சித் தலைவர் பொறுப்பை அடுத்த தலைமுறையின் கைகளில் ஒப்படைக்க வேண்டும் என்ற விருப்பத்தை ஜி.கே.மணி, கட்சியின் நிறுவனரிடமும் நிர்வாகிகளிடமும் தெரிவித்தார்.



கட்சியின் ஆரம்ப காலத்தில் இருந்தே கால் நூற்றாண்டுகளாக கட்சித் தலைவராக இருந்த தீரன், ஜி.கே.மணிக்குப் பிறகு அன்புமணி ராமதாஸ் 3 ஆவது தலைவராகப் பொறுப்பேற்றுள்ளார்.

மத்திய சுகாதாரத் துறை அமைச்சராக பணியாற்றிய காலத்தில் புகையிலை ஒழிப்பு, போலியோ ஒழிப்பு ஆகியவற்றுக்காக மேற்கொண்ட நடவடிக்கைகளுக்காக கீழ்க்கண்ட விருதுகளை வென்றுள்ளார்.

அமெரிக்க புற்றுநோய் சங்கத்தின் லூதர் எல்.டெர்ரி விருது, உலக சுகாதார நிறுவனத் தலைவரின் சிறப்பு விருது, உலக சுகாதார நிறுவனத் தலைவரின் சிறந்த தலைமைப் பண்புக்கான விருது, உலக ரோட்டரி சங்கத்தின் இளம்பிள்ளைவாதம், சென்னை ரோட்டரி சங்கத்தின் கௌரவம் தரும் விருது, இந்தியாவில் இளம்பிள்ளைவாதம் ஒழிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுத்ததற்காக 2014 ஆம் ஆண்டில் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி விருது வழங்கிப் பாராட்டினார்.

மத்திய சுகாதாரத்துறை அமைச்சராக பணியாற்றிய போது, 108 அவசர ஊர்தித் திட்டம், உலகின் மிகப்பெரிய சுகாதாரத் திட்டமான தேசிய ஊரக சுகாதார இயக்கம், அண்மையில் உலக சுகாதார நிறுவனத்தின் உலக சுகாதாரத் தலைவர்கள் விருது பெற்ற அங்கீகரிக்கப்பட்ட சமூக சுகாதாரப் பணியாளர்களை (ஆஷாக்கள்) நியமிக்கும் திட்டம், குட்காவுக்குத் தடை, பொது இடங்களில் புகைப்பிடிக்கத் தடை, திரைப்படங்களில் புகைப்பிடிக்கும் காட்சிகளில் எச்சரிக்கை வாசகம், போலியோ நோய் ஒழிப்பு, இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர ஆணையம் அமைத்தது, எய்ம்ஸூக்கு இணையான மருத்துவமனைகள் அமைத்தது, பாரம்பரிய அறிவுசார் மின்னணு நூலகம் அமைத்தது, தானாக செயலிழக்கும் சிரிஞ்ச்சை அறிமுகம் செய்தது உள்ளிட்ட ஏராளமான திட்டங்களைச் செயல்படுத்தி எண்ணற்ற சாதனைகளை படைத்தவர்.

பசுமைத் தாயகம் அமைப்பின் தலைவராக பணியாற்றிய போது ஆயிரத்திற்கும் மேற்பட்ட பள்ளிகளில் மரக்கன்றுகளை நட்டு பாதுகாத்து வளர்த்தவர். பசுமைத் தாயகம் அமைப்பின் சார்பில் ஏராளமான சிறு தடுப்பணைகளை கட்டியுள்ளார். ஆயிரக் கணக்கான ஏரிகள் மற்றும் குளங்களை தூர்வாரி இருக்கிறார்.

அன்புமணி சிறந்த அரசியல்வாதி என்பதில் மாற்றுக் கருத்து எதுவும் இல்லை. ஆனால், அவரது கட்சி 2026 ஆம் ஆண்டு ஆட்சியைப் பிடிக்கும் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. தமிழகத்தில் உள்ள வன்னியர்கள் அனைவரும் ஒருமித்து ஒரே கட்சிக்கு வாக்களித்தாலும் அந்த சமூகத்தால் ஆட்சியைப் பிடிக்கமுடியாது. ஒரு சில மாவட்டங்களில் வெற்றி,தோல்வியைத் தீர்மானிக்கும் சக்தி பாட்டாளி மக்கள் கட்சிக்கு ஒரு காலத்தில் இருந்தது.

காடுவெட்டி குரு வெளியேற்றப்பட்ட பின்னர் கட்சியின் வளர்ச்சியில் வீழ்ச்சி ஏற்பட்டது. ரஜினியுடனான மோதலை வன்னியர்கள் ரசிக்கவில்லை. புகைபிடிக்கும் காட்சியில் நடிக்கக்கூடாது என்ற கட்டுப்பாடு ரசிகர்களை கொதிப்படையச் செய்துள்ளது. இவை எல்லாம் பாட்டாளி மக்கள் கட்சிக்கு எதிரானவர்களின் வாக்கு மூலங்கள்.



அன்புமணியை வாழ்த்தி 2.0 என்ற விளம்பரங்கள் பளிச்சிட்டன. 'ஆளப்போகிறான் பாட்டாளி', '2026 இல் அன்புமணி தலைமையில் ஆட்சி அமைப்போம்' என்று கோஷம் எழுப்பினார்கள்.

2016ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலில் பாமக தனித்து களம் கண்டபோது அன்புமணி முதலமைச்சர் வேட்பாளராக முன்னிறுத்தப்பட்டார்.

1968 ஆம் ஆண்டு பாமக நிறுவனர் மருத்துவர் ராமதாஸின் மகனாக அன்புமணி ராமதாஸ் பிறந்தார். எம்.பி.பி.எஸ் பட்டப்படிப்பு படித்துள்ள அன்புமணி ராமதாஸ், லண்டனில் பொருளாதார பட்டப்படிப்பு முடித்துள்ளார். பாமக நிறுவனர் மருத்துவர் ராமதாஸ் தொடங்கிய, பசுமைத் தாயகம் அமைப்பிற்கு 1997 ஆம் ஆண்டு அன்புமணி ராமதாஸ் தலைவராகப் பொறுப்பேற்றார்.

இவர் பசுமைத் தாயகம் அமைப்பின் தலைவராக இருந்த போது ஐ.நா சபையின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்று 2013 மற்றும் 15 ஆண்டுகளில் ஜெனீவாவில் நடந்த ஐ.நா சபை கூட்டத்தில் அன்புமணி கலந்து கொண்டு பேசியுள்ளார். பசுமைத் தாயகம் அமைப்பின் தலைவராக இருந்தபோதே பாமகவின் பொதுக் கூட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களில் அன்புமணி ராமதாஸ் கலந்து கொண்டுள்ளார்.

2004 ஆம் ஆண்டு முதன்முதலாக ராஜ்யசபா உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, 2004ஆம் ஆண்டு அமைந்த காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசில் 35 வயதான அன்புமணி இளம் வயதில் மத்திய சுகாதாரத்துறை அமைச்சராக பொறுப்பேற்றார். 2006 ஆம் ஆண்டு பாமக இளைஞரணித் தலைவராக தேர்வு செய்யப்பட்டார்.

அன்புமணி மத்திய சுகாதாரத்துறை அமைச்சராக இருந்தபோது 108 அம்புலன்ஸ் திட்டம், பொது இடங்களில் புகைபிடிப்பதற்குத் தடை சட்டம் உள்ளிட்ட மருத்துவத்துறையில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு வந்தார். 2014 ஆம் ஆண்டு தர்மபுரி தொகுதியில் போட்டியிட்டு மக்களவை உறுப்பினராக பாமக அன்புமணி ராமதாஸ் தேர்ந்தெடுக்கப்பட்டார். 2016 ஆம் ஆண்டு மாற்றம் முன்னேற்றம் அன்புமணி என்ற முழக்கத்தோடு பாமக அன்புமணி தலைமையில் சட்டமன்ற தேர்தலில் தனித்துப் போட்டியிட்டது.

அனைத்து தொகுதியிலும் தோல்வியைத் தழுவிய பாமக, அந்தத் தேர்தலில் பென்னாகரம் தொகுதியில் போட்டியிட்ட அன்புமணி ராமதாஸ் தோல்வியைத் தழுவினார். 2019ஆம் ஆண்டு மீண்டும் தர்மபுரி தொகுதி மக்களவை தேர்தலில் போட்டியிட்ட அன்புமணி ராமதாஸ் தோல்வியடைந்தார்.

2019 ஆம்ஆண்டு அ.தி.மு.க கூட்டணி மூலம் மாநிலங்களவை உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டு தற்போது வரை மாநிலங்களவை உறுப்பினராக அன்புமணி ராமதாஸ் செயல்பட்டு வருகிறார். 1997 ஆம் ஆண்டு பசுமைத் தாயகம் அமைப்பின் மூலம் தொடங்கிய அன்புமணி ராமதாஸின் அரசியல் பயணம், ஏறக்குறைய 15 ஆண்டுகாலம் பாமக இளைஞரணித் தலைவராக இருந்து, தற்போது பா.ம.கவின் மாநில சிறப்பு பொதுக் குழுக் கூட்டத்தில் ஒருமனதாக பாமகவின் தலைவராக அன்புமணி ராமதாஸ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

ஸ்டாலினின் "திராவிட மொடல்" எனும் சொற்பிரயோகம் மத்திய அரசைக் கடுப்படைய வைத்துள்ளது. அதற்குப் போட்டியாக "2.0 மொடல் என அன்புமணி அறிவித்துள்ளார். 'அனைவருக்கும் உரிமை. அனைவருக்கும் வளர்ச்சி' என்பதை அடிப்படையாகக்கொண்டு உருவாகும் இந்தத் திட்டத்தில், வருங்கால தமிழகத்துக்கான தேவை என்பனவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பயணிக்க வேண்டும் என்பதையெல்லாம் பிராதனப்படுத்தி அதற்கான வரைவைத் தயார் செய்துகொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பாட்டாளி மக்கள் கட்சி என்றால் சாதிக் கட்சி என்ற அடையாளம் இடப்பட்டிருக்கிறது. அதனை மாற்றிவிட முடியாது. ■

# இஸ்லாம் எங்கள் வழி இன்பத் தமிழ் எங்கள் மொழி

இக்பால் அலி

“இஸ்லாம் எங்கள் வழி . இன்பத் தமிழ் எங்கள் மொழி” என்று எழுப்புகின்ற இலட்சியக் குரல் இரா. மகேஸ்வரனின் எழுதிய பயணக் கட்டுரை நூலில் எதிரொலிக்கின்றது. இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஆராய்ச்சி மாநாட்டு விழாக்களில் நடைபெற்ற மறக்க முடியாத அந்த அனுபவச் செழுமைகளையும் தகவல்களாக சேகரித்து ஓர் ஆவணமாக பேராதனைப் பல்கலைக்கழக நூலகர் இரா. மகேஸ்வரன் “அமைதி வழியும் மதுர மொழியும்” எனும் பெயரில் மாநாட்டுப் பதிவுகளை நூலாக வெளிக்கொணர்ந்துள்ளார்.


வேறெந்த விழாக்களையும் விட இஸ்லாமிய இலக்கிய ஆராய்ச்சி விழாக்கள் தரும் உற்சாகமும், நம்பிக்கையும் வார்த்தைகளில் சொல்ல முடியாததொன்று. மலேசியாவின் கோலாலும்பூரிலும் தமிழ் நாட்டில் காயல் பட்டினத்திலும் நடைபெற்ற இரு இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடுகள் பற்றியதாக இப்பயணக் கட்டுரை நூல்அமைந்துள்ளது. இஸ்லாமிய இலக்கிய வரலாறு உலகில் உன்னதமான இடத்தில் வைத்துப் போற்றப்படுகிறது. இஸ்லாமிய இலக்கியத்தில் காணப்படும் நயமும் சுவையும் கலை செழுமையும் அனைவரையும் ஈர்க்கும் தன்மை கொண்டவை. எந்தவொரு இலக்கியப் படைப்பாக இருந்தாலும் சரி மனித வாழ்வை வளப்படுத்துவதாகவும் மேம்படுத்துவதாகவும் அமைய வேண்டும்.அதேபோன்று இஸ்லாத்தின் வாழ்க்கை ஒழுக்கங்களையும் சட்ட ஒழுக்கங்களையும், பண்பாட்டுச் செழுமைகளையும் அறிந்து கொள்ளக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

நூலாசிரியர் இரா. மகேஸ்வரன் கூட சிறு பராயம் முதல் இன்று வரை முஸ்லிம்களோடு நெருங்கிய தொடர்புகளை வைத்திருப்பவர். அவர் இல்லத்திற்கு முன்னால்தான் கண்டி மீரா மக்காம் பள்ளியும் கண்டி புனித சில்வெஸ்டர் கல்லூரியும் அமைந்திருந்தது. ஐந்து நேரத் தொழுகைக்காக பள்ளியில் ஒலிக்கும் வாங்குகள் தினசரி அவர் காதிலும் கேட்கும். இப்பள்ளிக்கு குர்ஆன் ஓதுவதற்காக வரும் பிள்ளைகளோடு சேர்ந்து விளையாடுவதும் அங்குள்ள ஸியாரத்தில் கொடியேற்றம், கந்தூரி வழங்கல், சந்தனக் கூடு கட்டி இரண்டு காளை மாடுகளுடன் ஊர்வலமாக செல்ல பாவாமார்களின் றபன், கண் கட்டி வித்தைகள் இஸ்லாமிய பாடல்கள், பக்கீர்பைத் பாடல்கள், மல்யுத்தம், நெத்தியடிச் சண்டை, புலியாட்டம், கோலாட்டம் ஆகிய இடம் பெறும் கண்காட்சிகளை அவ்வப்போது நேரில் கண்டுகளித்த ஒருவர் தான். அதனால்தான் முஸ்லிம்கள் பற்றிய விளக்கங்களைத் தெளிவுடன் எழுதியுள்ளார். இடையிடையே இஸ்லாமிய ஆய்வு மாநாட்டில் விட்ட குறைகளை சுட்டிக் காட்டி காய்தல் உவத்தலின்றி தெளிந்த தண்ணீர் போன்று எழுதியுள்ளார்.

அதேபோன்று கலைஞர் மு.கருணாநிதி தலைமையில் மிகப் பிரமாண்டமாக நடைபெற்ற செம்மொழி மாநாடுகளின் சில ஏற்பாடுகள் இடம்பெறவில்லையே. இம்மாநாட்டிற்கு இந்தியா, இலங்கை போன்ற நாடுகளிலிருந்து தமிழ் இஸ்லாமிய ஆய்வறிஞர்கள், அரசியல் பிரமுகர்கள் வருகை தந்துள்ளார்கள். அவர்கள் இந்த மாநாட்டை கோவை செம்மொழி மாநாட்டுடன் பொருந்திப் பார்த்தால் தப்பான பிராயங்களையோ விமர்சனங்களையோ கொள்ளக் கூடாது. கடவுள் புண்ணியத்தில் நல்ல முறையில் இம்மாநாடு நடந்தேறி சிறப்பாக முடிவடைந்து விட வேண்டும் என்று நூலாசிரியர் நம்பிக்கையோடும் பிரார்த்தனையோடும் மாநாட்டை அவதானித்து கருத்துச் சொல்லக் கூடிய தன்மை நூலில்

மலேசியாவில் தமிழர் வீடுகளில் தமிழ் இல்லை.” என்று நூலில் எழுதிய தகவல்களை அறிந்தவுடன் மலேசியாவில் நமது தொப்பூள் கொடி உறவுகள் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை அறியச்செய்த விடயம் எம்மை அறியாமல் அந்நாட்டின் மீது ஏதோ ஒரு வகையில் ஈர்ப்புக் கொள்ளச் செய்து விடுகின்றது.

“ஸ்ஹென்டிநேவிய நாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழர்களின் எதிர்காலமும் அவர்களின் அடுத்த தலைமுறையும் இப்படித்தான் மாறிவிடுமோ என்ற எண்ணம் என்னில் உதித்தது” என்று நூலாசிரியர் இரா. மகேஸ்வரன் குறிப்பிடுகிறார்.. “ஒரு இனத்தின் அடையாளம் மொழியால் காப்பாற்றப்படுகின்றது. சீனர்கள், ஜப்பானியர்கள், அவர்களின் பெயர்களாலேயே இன அடையாளத்தைக் கண்டு கொள்கின்றனர். சீனாவில் பிறந்த ஒருவருக்கு சீன மொழியில் பெயரில்லை என்றால் அவர்களுக்கு எந்த அரச சலுகைகளும் வழங்கப்படுவது இல்லையாம்.” என நா.வை.குமரிவேந்தன் எழுதிய மொழி, பண்பாடு, வரலாறு மீட்பு காப்பு, வளர்ப்பு என்னும் நூலில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள விடயங்களாகும். எவ்வாறாயினும் புலம்பெயர்ந்து வாழும் சூழலில் யார் வாழ்ந்தாலும் அந்த நாட்டு மொழியின் தாக்கத்திலிருந்து தப்ப முடியாது. மலேசியாவில் புலம்பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழர்களுக்கு நிகழ்ந்தது ஒன்றே.. காலத்தின் தேவை கருதி இத்தகைய புலம்பெயர் சூழலில் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் நிர்ப்பந்த நிலைமைக்குள்




தள்ளப்படுகின்றனர். இத்தகைய தமிழர்கள் மொழி மறந்தாலும் குறித்த ஆங்கிலப் புலமையையோ அல்லது மலே மொழியின் புலமையில் ஊறி செயற்பட்டாலும் தமிழ் மொழியை விட்டு வெளியேறி விட வில்லை. தமிழ் மொழியைக் காப்பதில் வளர்ப்பதில் இடைவிடாது செயற்படுவோர்கள் உலகில் இல்

நடையில் விலாசித்து எழுதியுள்ளார் நூலாசிரியர் “கோவையில் செம்மொழி மாநாட்டில் மூன்று நாட்களில் 22 ஆய்வரங்குகளில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. காயல்பட்டண இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆய்வரங்கில் சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் 2 மணி வரை 11 ஆய்வரங்குகளில் 80க்கும் மேற்பட்ட கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. ஆனால், இங்கே இரண்டு மண்டபங்களில் அமைந்திருந்த 9 அரங்குகளில் வெறும் 23 ஆய்வு கட்டுரைகளே சமர்ப்பிக்கப்பட்டன. அதில் மூன்று கட்டுரைகள் இலங்கை ஆய்வாளர்களுடையதாகும்” என்ற குறிப்பிடப்பட்ட விமர்சனம் நூலுக்கு மெருகூட்டக் கூடியதாக இருக்கிறது. ஆய்வு மாநாடு என்பது மிகப் பெறுமதி வாய்ந்தது. ஆனால், அந்த ஆய்வு மாநாட்டை ஆய்வாளர்களோ அல்லது இம்மாநாட்டுக்கான ஏற்பாட்டாளர்கள் இது முக்கியத்துவம் வாய்ந்தது எப்படியும் இச்சந்தர்ப்பத்தில் சாதுர்யமாகப் பயன்படுத்திக் கொள்ள யாரும் முனையவில்லை எல்லோரும் ஆய்வு மாநாடுகள் நடத்துகின்றார்கள் நாங்கள் ஏனோ தானோ என்று ஒரு பாசனுக்கு நடத்தி விட்டுச் செல்வோம் என்று எதற்கும் பொருட்படுத்தாமல் நடத்தப்பட்ட ஒரு ஆய்வு மாநாடாக இந் நூலைப் படிக்கும் போது எண்ணத் தோன்றுகிறது. இந்த மாநாட்டுக்குச் செல்ல சிலருக்கு கடவுச்சீட்டு கிடைக்காமல் விட்டது கூட நன்மைக்குத்தான் எனத் தோன்றுகிறது. இது நல்ல விடயம். சொல்ல வேண்டியதை நேர்த்தியாகச் சொல்லி இருக்கிறார், எதிர்காலத்தில் இஸ்லாமிய தமிழ் ஆராய்ச்சி மாநாடுகள் நடத்த வேண்டியவர்கள் எப்படிச் செய்ய வேண்டும் என்ன என்ன செய்ய வேண்டும் எவை செய்யக் கூடாது என்பதை படித்து அறியலாம்.

பேராசிரியர் எம். ஏ. நுஹ்மான், பேராசிரியர் ரமீஸ் அப்துல்லா இம்மாநாட்டில் கலந்து கொள்ளாமை பற்றியும் 1967 மருதமுனையில் முதலாவது இஸ்லாமிய மாநாட்டை நடத்திய ஹஸன் மௌலானாவை ஒரு அரங்கிற்குத் தலைமை தாங்க சந்தர்ப்பம் வழங்கி இருக்க வேண்டும் என்ற குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப் பட்டிருந்தன. இப்படி நிறையும் குறையுமாக இந்த நூல் எழுதப்பட்டுள்ளது. மிக அருமையான விடயங்கள் பொதிந்துள்ளன. இஸ்லாமிய தமிழ் ஆய்வாராய்ச்சி பற்றிப் பேசுவதால் இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆய்வு நூலென்றே சொல்லத் தோன்றுகிறது. முஸ்லிம்கள் மீது அதிக பற்றுக் கொண்டு மகேஸ்வரன் எழுதியுள்ள இந்த பயணக் கட்டுரைகள் அத்தனையும் சிறந்த வழிகாட்டலுக்கான தன்மைகளைக் கொண்டவை. பர்வின் சுல்தானாவின் உரை கவியரங்கம், இஸ்லாம் அல்லாதோர் இஸ்லாமியரைப் பற்றி உரையாற்றியமை, காயல்பட்டிணத்தின் சிறப்பு, கலாநிதி எம். எம். உவைஸின் இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டின் பங்களிப்பு என இன்னும் எத்தனையோ மாநாட்டோடு தொடர்புபட்ட விடயங்கள் சிறப்பாக எழுதப்பட்டுள்ளன.

இந்நூல் பற்றி பேராசிரியர் துரை மனோகரன் வழங்கிய அணிந்துரையில் “மலேசியாவிலும், காயல்பட்டினத்திலும் நடைபெற்ற இரு இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாடுகள் பற்றியதாக இப்பயணக் கட்டுரை நூல் அமைந்துள்ளது. மாநாடுகள் இரண்டிலும் போற்றத்தக்க பல அம்சங்கள் பல இருந்தன. ஆனால், மலேசியா மாநாட்டை விடக் காயல்பட்டின மாநாட்டில் இலங்கையர்களின் பங்களிப்பு அதிகமாக இருந்தது. இப் பயண நூலில்

புலப்படுகிறது. அதேநேரம் இம்மாநாட்டின் இனிப்பான பெருமைப்பட்டுக் கொள்ள வேண்டிய செழுமையான விடயங்களை ஏனைய மாநாட்டின் வரலாற்றுச் சான்றுகளுடன் எடுத்துக் காட்டியுள்ளார் நூலாசிரியர் மகேஸ்வரன். “யாழ்ப்பாணத்து தமிழர்களின் வழித்தோன்றல்கள் தமிழை மறந்து விட்டனர். அவர்கள் 40,50 களிலேயே பர்மா, மலேசியா, ஆகிய நாடுகளுக்குப் புலம் பெயர்ந்து சென்று வேரூன்றி விட்டார்கள். மலேசியாவில் இவர்கள் பெரிய பதவிகளில் இருந்து வருகிறார்கள். பெரும்பாலும் தமிழ் இவர்கள் மத்தியில் அந்நிய மொழியாகி விட்டது.

லாமலும் இல்லை என மகேஸ்வரன் அவ்விடத்தில் சுட்டிக் காட்டி இருக்க வேண்டும். எனினும் உண்மையிலேயே மகேஸ்வரன் தமிழ் மொழியின் அவல நிலைமை பற்றி அப்படியே சிந்தாமல் சிதறாமல் அவர் திறம்பட எழுதியுள்ளார். இம்மாநாட்டுக்கு இலங்கையில் இருந்து சென்றவர்கள் விமான கடவுச்சீட்டு பெற்றுக் கொள்வதில் ஏற்பட்ட சிரமங்கள், கடவுச் சீட்டுக் கிடைக்காமல் ஏமாற்றம் அடைந்தவர்கள், மாநாட்டில் காணப்பட்ட குறைபாடுகள், அவர்களுடைய உபசரிப்புக்கள், விருந்தோம்பல் பண்புகள், சமர்ப்பிக்கப் பட்ட ஆய்வுக் கட்டுரைகள், மாநாட்டில் பங்கு பற்றிய முக்கிய பிரமுகர்கள் போன்ற பல தரப்பட்ட விடயங்கள் எல்லாம் தனக்கே உரித்தான கம்பீரமான மொழி

மகேஸ்வரன் இரு நாவலும் சிறப்பாக இருக்கிறது. இரு மாநாடுகள் தொடர்பாக நிறை குறைகளைச் சுட்டிக்காட்டியிருப்பது வரவேற்கத்தக்கது. நூலுக்கான முன்னுரையினை வண்ணவானவில் ஆசிரியர் அருள் சத்தியானந்தன் அவர்களும் பின் அட்டை அறிமுகத்தை பேராதனைப் பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத் தலைவர் வ.தர்மதாசன் அவர்களும் வழங்கியுள்ளனர். இந்நூலிலுள்ள விடயங்களில் இஸ்லாமிய தமிழ் ஆராய்ச்சி மாநாடொன்று நடத்துவதற்கான சிறந்த வழிகாட்டல்கள், ஆலோசனைகள் அமைந்துள்ளன. ஒரு இலக்கிய மாநாடு நடத்துபவர்களுக்கு இப் பயணக் கட்டுரை நூல் மிக உதவியாக இருக்கும். இஸ்லாமிய இலக்கியச் செயற்பாட்டுக்கு இந்நூல் காலம் பூராவும் வைத்துப் பாதுகாக்கப்பட வேண்டியவை. உங்கள் பணி தொடர வாழ்த்துகள்.

# தெரிந்த சினிமா தெரியாத சங்கதி

ரமணி

21



நடிகர் திலகம் என்றால் அது சிவாஜிதான். அவருடைய பெயர் வி.சி.கணேசன். மராட்டிய மாவீரன் சிவாஜி பாத்திரத்தை ஏற்று நடித்ததால் கணேசன் என்ற பெயர் மறைந்து சிவாஜி எனும் பெயர் முன்னிலை பெற்றது.

“பராசக்தி” எனும் படத்தில் கதாநாயகனாக நடித்து அறிமுகமானார். முதல் படமே பெரு வெற்றி பெற்றது. முதல் படமே வெள்ளிவிழாவைக் கடந்து 200 நாட்கள் ஓடியது. சிவாஜி மட்டும் நடிப்பதில்லை, அவரது உடை, கைத் தடி, தலை முடி என்பனவும் நடிக்கும் என்பார்கள். சிவாஜி சிகரெட் புகைக்கும் போது ஒரு ஸ்ரைல் இருக்கும் புகையை வெளிவிடுவதிலும் ஒரு நயம் இருக்கும். சிவாஜியின் திரைப்பட வெற்றி இலகுவானதாக இருக்கவில்லை.

முதல் படத்திலேயே கதாநாயகனாக நடிக்கும் போது பலத்த அவமானம் ஏற்பட்டது. பராசக்தி படத்தில் கே.ஆர்.ராமசாமி கதாநாயகனாக நடிக்க வேண்டும் என தயாரிப்பாளர் ஏ.வி.மெய்யப்பச்செட்டியார் விரும்பினார். சிவாஜியின் உருவமும் வாய் அசைப்பும் அவருக்குப் பிடிக்கவில்லை. சிவாஜியின் நடிப்பை நாடகங்களில் பார்த்து ரசித்த பெருமாள் முதலியார், சிவாஜியின் மீது மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தார். மெய்யப்பச் செட்டியாரின் கருத்தை அவர் காதில் வாங்கவில்லை. ஒரு சிலர் செட்டியாரை உசுப்பேற்றிக் கொண்டிருந்தனர். அதனால் சிவாஜியின் கவனம் சிதறியது.

படப்பிடிப்பு நடக்கும் பொழுதெல்லாம் தளத்தில் இருந்தவர்களின் பேச்செல்லாம் சிவாஜியின் காதுக்குள் விழ மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகியிருக்கிறார். இந்தப் படம் தொடருமா? நாம் இதில் நாயகனாக நீடிப்போமா? என்கிற குழப்பம் தினமும் அவருடைய மனதைக் குடைந்து கொண்டேயிருக்க, படப்பிடிப்பு முடிந்தவுடன் கண்ணீர் விட்டு அழுதார்.

அவருடைய சுயசரிதையில்,’அந்த நேரத்தில் படப்பிடிப்பு முடிந்த பிறகு, எங்கேயாவது தனியாக உட்கார்ந்து கொண்டு அழுது கொண்டிருப்பேன். பராசக்தி படத்தின் இயக்குநர்களில் ஒருவரான கிருஷ்ணன் ஐயா என்னருகில் வந்து, என் தோளைத் தொட்டு மிகுந்த ஆறுதலுடன் பேசுவார்.

‘மற்றவர்கள் பேசுவதையெல்லாம் காதில் வாங்காதே. உன் நடிப்புல மட்டும் கவனத்தைக் காட்டு. இன்னும் நல்லா அடி. உன்னைப் புறக்கணிப்பவர்களே பாராட்டும்படியா நடிப்புல கவனத்தைச் செலுத்து அவர்களே கூட பின்னாளில் தேடி வரும்படியான காலம் வரலாம். எதுக்கும் கவலைப்படாதே என்று என்னுடைய தன்னம்பிக்கையை கூட்டும் விதமாக ஆறுதலாகப் பேசுவார்.

என் தெய்வங்களான பெருமாள் முதலியாரும், இயக்குநர் கிருஷ்ணனும் இல்லையென்றால், ‘பராசக்தி’,படத்தில் நான் முழுமையாக நடித்திருக்க முடியாது”,என்று சொல்லியிருக்கிறார்.

பாடல்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்ட காலத்தில் சிவாஜி பேசிய கலைஞரின் வசனங்கள் ரசிகர்களின் மனதில் ஆழமாகப் புகுந்தன. தயாரிப்பாளர்களும் இயக்குநர்களும் சிவாஜியைத் தேடிச் செல்லத்தொடங்கினர். மனோகர், திரும்பிப்பார் போன்ற படங்கள் சிவாஜியின் பெயரை பட்டி தொட்டி எங்கும் எதிரொலிக்கச் செய்தன. சிவாஜியை வேண்டாம் என ஒதுக்கித்தள்ளிய மெய்யப்பச் செட்டியார் இரண்டு வருடங்கள் கழித்து 1954 ஆம் ஆண்டு சிவாஜியைத் தேடிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.

‘ஒரு நாள்’ எனும் பெயரில் ஏ.வி.எம் ஒரு படத்தைத் தயாரித்தது. ‘அந்த நாள்’ எனும் பெயருடன் அப்படம் வெளியானது. எஸ்.பாலசந்தர் இயக்கத்தில் அந்தப் படத்தில் எஸ்.வி.சகஸ்ரநாமம் கதாநாயகனாக நடித்தார். ஒரு சில நாட்கள் படப்பிடிப்பு நடந்தது. அவரை நீக்கிவிட்டு மேற்கு வங்கத்தைச் சேர்ந்த விஸ்வநாதன் எனும் நாடக நடிகரை ஒப்பந்தம் செய்து சில நாட்கள் படப்பிடிப்பு நடந்தது. அவரும் சரிவரவில்லை. யாரைப் போடுவது என ஆலோசனை செய்த போது சிவாஜி ஞாபகத்துக்கு வந்தார்.

சிவாஜி ஒத்துக் கொள்வாரா என்கின்ற சந்தேகம் படக்குழுவிற்கு ‘சிவாஜி என்ன சம்பளம் கேட்டாலும் கொடுத்து விடுங்கள். அவர், இந்தக் கதாபாத்திரத்தில் நடித்தால்தான் சரியாக வரும்’, எனப் பிடிவாதமாக நின்றார் தயாரிப்பாளர். தயாரிப்பு நிர்வாகி வாசுதேவன் சிவாஜியை அணுகினார். பழைய சம்பவங்கள் ஞாபகத்துக்கு வந்ததால் அதைத் தட்டிக் கழிக்க விரும்பிய சிவாஜி, 40,000 ரூபா சம்பளமாகக் கேட்டார். 1954 ஆம் ஆண்டு அது மிகப் பெரிய தொகை. 25,000 ரூபா ஒப்பந்தம் கைச்சாத்தானது. தினமும் 1000 ரூபா கொடுக்க வேண்டும் என சிவாஜி கேட்டார். அதற்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டது. வரலாறு திரும்பியது. சிவாஜியை வேண்டாம் என்றவர்கள் சிவாஜி கேட்ட எல்லாத்தையும் கொடுக்கத் தயாராக இருந்தனர். ஏ.வி.எம் தயாரிப்பில் வெளியான ‘அந்தநாள்’ எனும் படம் மிகப்பெரிய வெற்றி பெற்றது. கதாநாயகனாக வளர்ந்து கொண்டிருக்கும் போது எதிர்மறையான பாத்திரத்தில் நடித்து புகழ் பெற்றார் சிவாஜி.

சிவாஜியின் 125 ஆவது படமான, ‘உயர்ந்த மனிதன்’, படத்தை ஆரம்பிக்கும் பொழுது சிவாஜி நடிக்கவில்லையென்றால் இந்தப் படமே வேண்டாம் என்று தயாரிப்பாளர் சொல்லும் அளவிற்கு சிவாஜி வளர்ந்தார்.

‘அந்தநாள்’ படத்திலிருந்து தூக்கப்பட்ட நடிகர்தான் கல்கத்தா விஸ்வநாதன். வேலூரைச் சேர்ந்தவர்.மேற்குவங்காளத்தில் குடியேறியவர். சத்யஜித்ரே படங்களிலும் நடித்திருக்கிறார். மேடை நாடக நடிகர். கல்லூரிப் பேராசிரியர் என பன்முகத் திறன் படைத்தவர்.

பின்னாளில் சிவாஜிக்கு தந்தையாக ‘கவரிமான்’ திரைப்படத்திலும் ‘வெள்ளை ரோஜா’ திரைப் படத்தில் கொலையாளியாகவும் ‘மூடுபனி’ திரைப் படத்தில் பிரதாப் போத்தனுக்கு கார்டியனாகவும் ‘மூன்று முடிச்சு’ திரைப்படத்தில் ரஜினிக்கு தந்தையாகவும் நடித்துள்ளார். ■



# கல்யாணக்கனவு

தொடர்கதை

26

யாழ் சத்யா

முரளியைக் கண்டதுமே அவனைத் தோளோடு தோள் சேர்த்துக் கட்டியணைத்தவன்,

“அப்ப எப்ப மச்சான் பார்ட்டி? லவ்லி கிறீம் கவுஸ்க்குப் போவமா? இல்லை கொத்துரொட்டியா? வைஷூக்கு ஒரு மாதிரி ஓகே சொல்லிட்டியாமே... வாழ்த்துகள் நண்பா...”

முரளியின் கையைப் பிடித்துக் குலுக்கவும் அவனோ முகம் இறுக சஞ்சயன் கையை விடுவித்தவன்,

“உனக்கு யார் சொன்னது?”

“என்ன கேள்வியடா இது? வைஷூதான்...”

“அப்போ அவளுக்கும் உனக்கும் இடையில எந்த ரகசியமும் இல்லையோ...?”

“என்னடா இது புதுசா கேட்கிறாய்? சின்ன வயசில இருந்தே நானும் அவளும் ப்ரெண்ட் என்றது ஊரறிஞ்ச உண்மை தானேடா....”

“ப்ரெண்ட் என்றால்... என்ன மாதிரியான ப்ரெண்ட்? அவளுக்கு நான் முக்கியமா...? இல்லை நீ முக்கியமா...? நான் லவ்வைச் சொன்ன அடுத்த செக்கனே உன்னட்ட ஓடி வந்து சொல்லுறாளே... இனி மேல் இப்பிடித்தான் எங்களுக்க நடக்கிற எல்லாத்தையும் உன்னட்ட வந்து சொல்லிட்டு இருப்பாளா? நான் கிஸ் பண்ணினாலும் வந்து சொல்லுவாளா? அவள்தான் வந்து சொல்லுறாள் என்றால் நீயும் வெட்கமில்லாமல் கேட்டிட்டு இருக்கிறியே... ச்சை...”

முரளிதரன் பேசப் பேசத் திகைத்துப் போய் நின்றிருந்தான் சஞ்சயன். பதில் பேச வார்த்தைகள் வர மாட்டேன் என்றது. வைஷாலி, சஞ்சயன் இரு குடும்பத்தவர்களும் கூட நெருங்கிய நண்பர்களாக இருந்ததால் இன்று வரை இவர்கள் நட்புக்கு எந்த வித பிரச்சினையும் வந்ததில்லை. யாரும் இவர்கள் உறவைக் கொச்சைப்படுத்தியோ களங்கப்படுத்தியோ பேசியதில்லை.

அவ்வாறிருக்க இப்போது முரளிதரன் பேசியவற்றைத் தாங்க முடியாது துடித்துப் போனான் சஞ்சயன். அப்போதும் அவன் மனம் முரளிதரன் எண்ணம் இவ்வாறிருப்பதை வைஷாலி அறிந்தால் அவள் மனது எவ்வளவு வேதனைப்படும் என்பதில்தான் எண்ணம் சென்றது.

“என்ன முரளி இப்பிடிக் கதைக்கிறாய்? அவ சாதாரணமாகத்தான் சொன்னா. எந்த விசயத்தைச் சொல்ல வேணும், எதைச் சொல்லக் கூடாது என்ற விவஸ்தை இல்லாத பொண்ணா அவ? ப்ளீஸ்... இப்பிடிக் கதையாதையடா... கஷ்டமாக இருக்கு... வைஷூ உன்னில உயிரையே வைச்சிருக்கிறாள். அவ என்ன செய்தாலும் அது ஏதோ விதத்தில உனக்காகத்தான் இருக்கும். அப்படியிருக்க நீ இப்பிடிக் கதைக்கிறது தப்பு முரளி... வைஷூக்கு நீ இப்பிடிச் சொன்னது தெரிஞ்சாலே ரொம்ப வேதனைப்படுவாடா...”

“எனக்கு அதெல்லாம் தெரியாது சஞ்சு... வைஷாலி எனக்கு மட்டும் தான் சொந்தமாக இருக்க வேணும். நீயும் அவளும் இவ்வளவு குளோஸ் ப்ரெண்ட்ஸ் ஆக இருக்கிறது எனக்குப் பிடிக்கேல்ல. என்னோட வைஷாலிட லவ் தொடர வேணும் என்றா நீ அவளை விட்டு விலத்த வேணும். இப்பிடி எடுத்ததுக்கும் அவள் உன்னட்ட ஓடி வாறதும், அவளுக்கு ஒன்றென்றால் நீ துடிக்கிறதையும் இனியும் என்னால பார்த்துச் சகிக்க முடியாது.

இனி வைஷாலியைப் பார்த்துக் கொள்ள நானிருக்கிறன். அதால நீ உன்ர வேலையை மட்டும் பார்த்திட்டுப் போ. இனி அவளோட கதைக்கிற வாடிக்கை வைச்சிராதை... வைஷாலிக்கு நான் வேணுமா? இல்லை நீ வேணுமா? என்று நீயே முடிவெடுத்துக் கொள்ளு. வைஷாலிட சந்தோசம் இனி உன்ர கையில தான்...” கூறிவிட்டு சஞ்சயன் பதிலைக் கூட எதிர்பாராது சென்றவனையே வேதனையோடு பார்த்திருந்தான் சஞ்சயன். அவனைப் பொறுத்தவரை இதிலே யோசிக்க என்ன இருக்கிறது? வைஷாலிக்கு முரளிதரன்தான் முக்கியம் என்று அவன் அறியாததா? இனிக் கொஞ்சம் கொஞ்சமாக அவளை விட்டு விலக வேண்டியதுதான் என்று முடிவெடுத்தவனாய் அதைச் செயற்படுத்தும் வழியை யோசித்தான்.

இந்தச் சம்பவம் நடந்து சில வாரங்களில்தான் அவந்தியின் இழப்பு நேர்ந்தது. வைஷாலி, சஞ்சயனின் வாழ்க்கையில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தி சஞ்சயனை வைஷாலி வாழ்க்கையை விட்டே விலக வழி சமைத்தது. அவந்தியின் இழப்பை ஜீரணிக்க முடியாத இருவராலும் உரிய முறையில் உயர்தரப் பரீட்சையில் கவனம் செலுத்த முடியவில்லை.

சஞ்சயனின் மருத்துவக் கனவு கனவாகவே ஆகி விட, அவனுக்கு மருத்துவம் படிக்க அனுமதி கிடைக்கவில்லை. மறுபடியும் அடுத்த வருடம் பரீட்சை எடுத்திருந்தால் நிச்சயமாக இடம் கிடைத்திருக்கும்தான். அதற்குரிய திறமை அவனிடம் இருந்தது. வயம்ப பல்கலைக்கழகத்தில் இடம் கிடைக்கவே வைஷாலியை விட்டுத் தூரமாய் விலகினால் போதும் என்ற எண்ணம் மட்டுமே கொண்டிருந்தவன் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அஞ்ஞாத வாசத்தை ஆரம்பித்தான்.


வைஷாலிக்குத் திரும்பப் பரீட்சை எடுக்கும் எண்ணம் இருந்தது. ஆனால், முரளிதரனோ தடுத்து விட்டான்.

“இங்க பார் வைஷூ...! நான் மொரட்டுவ கம்பஸ்க்கு வந்திட்டன். நீ திரும்ப சோதினை எடுத்தாலும் எந்த கம்பஸ் கிடைக்குமோ தெரியாது. உன்னை வேற எங்கேயும் அனுப்பிட்டு என்னால நிம்மதியாக இங்க இருந்து படிக்கவும் ஏலாது... நீ ஊரிலேயே ஏதாவது பிரைவேட்டாப் படி... அல்லது ஏதாவது வேலைக்குப் போ...”

முரளி சொல் மிக்க மந்திரம் இல்லை என அவன் வாக்கை வேத வாக்காக மேற்கொண்டு, வைஷாலி வேலைக்கு முயன்றதில் இலங்கை வங்கியில் வேலையும் கிடைக்க அவளும் அதிலேயே மகிழ்ச்சி அடைந்தவளாக வாழ்க்கையை ஓட்டினாள்.

வைஷாலி, முரளிதரன் காதலுக்கு இருவர் வீட்டிலும் பச்சைக்கொடி காட்டியதால் பல்கலைக்கழக விடுமுறை நாட்களில் முரளிதரன் ஊருக்கு வரும் நாட்களில் இருவரும் யாரோ ஒருவர் வீட்டில் சந்தித்துக் கொள்வார்கள். எங்கேயாவது வெளியே செல்வதும் உண்டு. அதேபோல எப்போதாவது வைஷாலி கொழும்பு சென்றாலும் முரளியைச் சென்று பார்த்து விட்டு வருவாள்.

ஆரம்பத்தில் இருவருக்குள்ளும் எல்லாம் நன்றாகத்தான் போய்க் கொண்டிருந்தது. முரளிதரனின் தலையாட்டி பொம்மையாக வைஷாலி இருந்தமையால் அவர்களுக்குள் பெரிதாகச் சண்டைகள் வந்ததில்லை. மற்றைய காதலர்கள் போல ஊடலோ, கூடலோ எதுவுமற்று தினமும் தொலைபேசியில் நலம் விசாரிப்பதும் நேரில் சந்திக்கும் போது பரிசுகள் பரிமாறிக் கொள்வதுமாய் நாட்கள் அழகாகவே நகர்ந்தன.



எப்போதுமே வாழ்வில் தென்றல் காற்று மட்டும் வீசிக் கொண்டிருக்கும் என்று எதிர்பார்க்க முடியுமா என்ன? நிஷாவும் கஜாவும் இடையிடையே வந்து புரட்டிப் போட்டு வாழ்க்கை என்பது இன்ப துன்பம், ஏற்ற இறக்கம் எல்லாம் நிறைந்தது என்று காட்டத் தானே செய்கின்றன. அதற்கு இவர்கள் வாழ்வு மட்டும் என்ன விதி விலக்கா?

பழைய நினைவுகள் ஆட்டிப் படைக்கத் தூங்க முடியாமல் உழன்று கொண்டிருந்தவளை கைத் தொலைபேசிச் சத்தம் எழும்பி உட்கார வைத்தது. அருகே கிடந்த தொலைபேசியை எடுத்துப் பார்த்தாள். நேரம் அதிகாலை இரண்டு மணி காட்டியது. சஞ்சயன் தான் குறுஞ்செய்தி அனுப்பி இருந்தான்.

“நீ நித்திரை கொள்ளாமல் பழசெல்லாம் நினைச்சிட்டு இருப்பாய் என்று தெரியும். நீதானே சொன்னாய்... முடிஞ்சதை நினைச்சு கவலைப்பட்டுப் பிரியோசனமில்லை... இனி நடக்கிறதைப் பார்க்க வேணும் என்று... ஸோ அதே அட்வைஸ்தான் உனக்கும். நாளைக்கு வேலைக்குப் போக வேணும் எல்லோ... ஸோ கண்ணை இறுக்கி மூடிக் கொண்டு நூறு வரை எண்ணு. நித்திரை வந்துவிடும். குட்நைட் முயல் குட்டி...”

அவன் குறுஞ்செய்தியை வாசித்தவள் வதனத்தில் மென்னகை ஒட்டிக் கொண்டது. சஞ்சயன் எப்போதும் இப்படித்தான். அவள் மனதை பிரதிபலிக்கும் கண்ணாடி அவன்.

அவனது குறுஞ்செய்தியில் கடைசியில் இருந்த குட்நைட் முயல்குட்டியில் முயல்குட்டியை மட்டும் நீக்கி விட்டு மீதியை அப்படியே பிரதி செய்து சஞ்சயனுக்கே திரும்ப அனுப்பி விட்டுப் படுத்துக் கொண்டு அவன் சொன்னது போலவே நூறு வரை எண்ண ஆரம்பித்தாள்.

தான் அனுப்பியதைத் தனக்கே திரும்ப அனுப்பிய அவள் குறும்புத்தனத்தை எண்ணிச் சிரித்தபடி சஞ்சயனும் தூங்க முனைந்தான்.

ஒவ்வொரு நாளும் விடியும் என்ற நம்பிக்கையில்தான் தூங்குகிறோம். ஆனால், அந்த விடியல் இந்த நண்பர்கள் வாழ்வில் தரப் போவது வேதனைகள் மட்டும்தானா?

**அவள் கனவு தொடரும்......**



சிறுகதை

# பெண்மையின் தேடல்...

சந்திரமதி போல்ராஜ்

பார்வதியின் உடல் நடுங்கிக்கொண்டிருந்தது. தேயிலை மலைகளும் அட்டைகளும் பழகிய உடம்பாக இருந்தாலும் அன்றைய தினம் பெய்த அடை மழைக்கு பார்வதியால் தாக்குப் பிடிக்க முடியவில்லை. காலை உணவை உண்பதற்காகக் காத்திருந்த அவளுக்கு மேரியின் அழைப்புக் குரல் ஆறுதல் அளித்தது. மழையோ வெயிலோ அனைவரும் ஒன்றாக அமர்ந்து உணவருந்தும் ஆலமரத்தின் கீழ் அன்று பலரைக் காணவில்லை. தலையில் சுமந்து கொண்டிருந்த தேயிலைக் கொழுந்து கூடையைக் கீழே இறக்கி வைத்துவிட்டு மழைச்சாரலில் இருந்து தப்பிக்கக் கூடிய இடங்களில் மேரியும் பார்வதியும் அமர்ந்தனர்.

'என்னடி மேரி மத்தவங்க எல்லாம் எங்க? மத்த நாளைக்கு ஆளுக்கு முதல் நிப்பாளுங்க இன்னைக்கு யாரையும் காணோம்...'

'அவங்களுக்கென்ன பசிக்குற நேரம் சாப்பிடுவாங்க இப்ப சாப்பாட்டை விட ராத்தல்தானே முக்கியம்.'

'என்னடி மேரி ஏதோ நாம தேயிலை தோட்டத்திலயும் அவங்க ஆப்பீசுலயும் வேலை செய்யுற மாதிரி கதைக்கிற...' என்றாள் பார்வதி.

அதற்குச் சலித்துக்கொண்டு,

'ஆமா பார்வதி அக்கா, ஆபிசுல வேலை செய்யாட்டியும் கங்காணிக்கு வேண்டியவர்களாகவும் தோட்ட தலைவரோட சொந்தக்காரர்களாகவும் இருந்தா நமக்கு இந்தச் சலுகை எல்லாம் கிடைக்கும்.'

மேரி பேசுவது புரியாத பார்வதி சற்று கோபத்துடன் 'மேரி எதையாவது புரியிற மாதிரி கதைக்கிறியா? பத்தாம் வகுப்பு வரைக்கும் படிச்ச பெருமையை பேச்சுல காட்டாம நேரடியாக விஷயத்தைச் சொல்லு...'

இப்போதும் மேரியிடம் ஒரு சலிப்புத்தன்மைதான்,

'அது சரி, பார்வதி அக்கா இப்போ இந்த நோயால நமக்கு தொடர்ந்து வேலை தர முடியாத சூழ்நிலைதானே அக்கா அதோட எல்லாரும் வேலைக்கு வாரதும் இல்ல. ஒரு நாளைக்கு ஒரு மலையை முழுசா முடிக்கிறதுக்காக ஆளுக்கு ரெண்டு நெறை கொடுத்திருக்காங்க.'

அதிர்ச்சியுடன் பார்வதி 'என்னடி சொல்ற ரெண்டு நெறைய...!'

'ஆமா அக்கா, நாம ஒரு நெறைய முழுசா எடுத்தாலும் 15 கிலோதான் கிடைக்கும் முழுப் பேரு போட்டு ஒரு நாள் சம்பளத்தை முழுசா எடுக்க இன்னும் 5 கிலோ சரி வேணும் ஆனா அவங்க ரெண்டு நெறைய முழுசா எடுத்தாலே 30 கிலோவுக்கு மேல வரும் அக்கா..'

'ஆமாண்டி மேரி அதான் யாரும் சாப்பிடக் கூட வராம முழுப் பேரு போட நினைக்கிறாங்க போல.'

மேரி 'ம்ம்ம்ம்......' என்றாள்.

'ஆமாம் மேரி ஏன் அப்போ நமக்கு மட்டும் ஒரு நெறை?' என்றாள் பார்வதி.

'நல்லா கேட்ட அக்கா அப்படி இரண்டு நெறை வேணும்னா நீ ஒன்னு கங்காணிட சாதிசனமாக இருக்கணும் இல்லன்னா அவங்க சொல்லுறதுக்கெல்லாம் தலையாட்டனும் நாம கொஞ்சம் சுயமரியாதையோடு வாழ நினைக்கிறதுக்குத் தண்டனைதான் இது..'

அதற்கு பார்வதி 'என்னடி நீ எல்லாரும் வயிற்றுப் பொளப்புக்காக ஒரே தேயிலை மலையிலதான் கொழுந்து பறிக்கிறோம் இதில என்ன சாதி,சனம்?'

அதற்கு மேரி 'பார்வதி அக்கா, இவர்களைப் பொறுத்த வரைக்கும் காசு, பணம் இருந்தா உயர்ந்த சாதி, ஏழை தாழ்ந்த சாதி அவ்வளவுதான் அக்கா அது மட்டுமில்ல ஆரம்பத்துல பெண்களை சாதி, சாஸ்திரம், சம்பிரதாயம், கலாசாரம்னு அடுப்பங்கரையிலேயே வச்சிட்டாங்க இப்போ ஏதோ கொஞ்சம் முன்னேறி வேலைக்குப் போனால் அங்கேயும் கொஞ்சமாவது சுயமரியாதையோடு வாழ நினைச்சா இந்தா இப்படி ஒதுக்கி வச்சிடுறாங்க ....இதெல்லாம் எங்க போய் சொல்றது.'

இதற்கு பார்வதியால் பதில் கூறமுடியவில்லை ஏதோ யோசனையில் தலையசைத்துவிட்டு காலை உணவை உண்டு முடித்து விட்டு மறுபடியும் தேயிலை மலைக்குச் சென்று கொழுந்து பறிக்க ஆரம்பித்தனர். அப்போது பெய்த மழை சற்றுக் குறைந்தது இருப்பினும் தன் மகள் பூஜாவை நினைக்கும்போது பார்வதியின் உள்ளமும் சேர்ந்து நடுங்கியது.

ராஜா உயர்ந்த சாதியாகவும் ஊர் மக்கள் அனைவரும் மதிக்கக் கூடிய குடும்பத்தில் பிறந்தவன். இந்தக் கிராமத்தில் சொந்தமாக வீடு, வாகனம் என வசதியாக வாழ்ந்தவன். வேற்று சாதிப் பெண் பார்வதியைக் காதல் திருமணம் செய்ததால் ராஜாவின் பெற்றோர்கள் அவர்களை வீட்டை விட்டு துரத்தி விட்டனர். இதனால் தனிக் குடும்பமாக வாழ ஆரம்பித்தவர்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்தாலும் அது நீடிக்கவில்லை ராஜா காடு மலைகளில் வேலை செய்து பழக்கமில்லை என்றாலும் குடும்பத்திற்காக உழைக்கச் சென்றவன் தேயிலை மலையில் தவறி விழுந்து உயிரிழந்தான்.

இவ்வாறு தனது கடந்தகால வாழ்க்கை பற்றிய யோசனையில் மூழ்கிய பார்வதியைத் தட்டிக் கூப்பிட்டாள் மேரி,

'பார்வதி அக்கா வா போகலாம் வரிசையில் முதலில் போனாத்தான் வீட்டுக்கு வெள்ளனப் போகலாம் இல்லனா கொழுந்தள்ள விட்டுருவாங்க..'

வலியை மறைத்துக் கொண்டு சிரித்தபடி 'ம்ம்ம்... போகலாம்' என்று சொன்னாள். மாலை நேரம் வேலை முடித்துவிட்டு வீட்டிற்குச் சென்ற பார்வதியை 'அம்மா...' என அழைத்துக் கொண்டு ஓடி வந்தாள் பூஜா. அனைத்து கவலைகளுக்கும் ஆறுதலாக பூஜாவே காணப்பட்டாள். அவளைப் படிக்க வைத்து ராஜாவின் பெற்றோர்கள் முன் பெரியாளாக்குவதே அவளது கனவு.

வீட்டு வேலைகளைச் செய்து விட்டு இரவு தூங்குவதற்கு முன் பூஜா 'அம்மா கதை சொல்லுங்க' என்றாள். ஆனால், பூஜாவின் குரல் கேட்கவில்லை மீண்டும் அழுத்தமாக 'அம்மா கதை சொல்லுங்க' என்றாள் பூஜா 'அம்மா நாளைக்கு கதை சொல்றேன்' என்று பார்வதி சொன்னாள்.

பூஜா 'அம்மா நீ கேட்டதானே நான் படிச்சு பெரிய ஆளாகி என்ன செய்யப் போறேனு, நான் இப்போ சொல்லவா?' என்றாள். பார்வதிக்கு ஏதோ புத்துணர்ச்சியாக 'என்ட செல்லம் என்னவாக போறீங்க' எனக் கேட்டாள். பூஜா, உடனே 'நானும் உன்னை மாதிரி கொழுந்து பறிக்கத்தான் போவேன்' என்றாள். அதிர்ச்சியில் பார்வதியின் கண்களில் இருந்து கண்ணீர் வடிந்தது இருப்பினும் பொறுமையாக 'ஏன் இப்படி சொல்ற பூஜா' என்றாள். அதற்கு 'அம்மா பக்கத்து வீட்டு டீச்சரக்காதான் சொன்னாங்க. நான் டீச்சர் அதால என் மகள் டீச்சர் ஆவாள் ஆனால் நீ கொழுந்து பறிக்கிறவங்க புள்ளதானே அதால நீயும் கொழுந்துதான் பறிப்ப உனக்கு படிச்சி கொடுக்க உங்கம்மாவுக்கு படிப்பறிவு இருக்கனுமேனு சொன்னாங்க அம்மா'

'அப்படி எல்லாம் இல்ல பூஜா தோட்டத் தொழிலாளிகள் பிள்ளைகளும் பெரிய படிப்பு படித்து இருக்காங்க' எனப் பதிலளித்தாள் பார்வதி.

உடனே பூஜா 'அம்மா ஆனால் கொழுந்து பறிக்கிறதுதான் நல்ல வேலை இப்போ பாரு நாட்டில் எதுவும் பிரச்சினைனா இந்த நோய் எதுவும் வந்தா அந்த டீச்சர் எல்லாம் வேலை இல்லாமல் வீட்டில இருக்காங்க ஆனா நீ எந்த நாளும் வேலை செய்ற இதுதான் நல்ல வேலை' என்றாள்.

பார்வதி சிறு புன்னகையுடன் 'பூஜா அம்மா நான் சொல்லுறதைக் கேளு நாட்டிலே இந்தப் பிரச்சினை வந்து இப்போ யாருக்கு வேலை இல்லை, டீச்சர் வேலை இல்லாமல் வீட்டில் இருந்தாலும் அவங்க மூணு நேரமும் சாப்பிடுறாங்க, அவங்க தேவைகளை நிறைவேற்றித் தாற அளவுக்கு எதிர்காலத்திற்குத் தேவையான காசு சேமித்து வைக்கிற அளவிற்கு அவர்களுக்கு வேலையும் அதுக்கேற்ற சம்பளமும் கிடைக்கும் பூஜா' என்றாள்.

தொடர்ந்து பார்வதி கூறினாள் 'நீ மட்டுமில்ல எல்லாரும் யோசிக்கிறாங்க நாட்டுல இந்தச் சூழ்நிலையிலையும் எங்களுக்கு வேலை இருக்குனு ஆனால், இப்படிப்பட்ட சூழ்நிலையிலையும் வேலை செஞ்சா மட்டுமே நமக்கு ஒரு நேரச் சாப்பாடு கிடைக்கும்' என்றாள்.

'அம்மா நீங்களும் அந்த டீச்சர் மாதிரி காசு சேர்த்து வைத்து இருக்கலாம்தானே அம்மா...' என்றாள் பூஜா.

'அதுக்கு உழைப்புக்கேற்ற ஊதியம் இருக்கணும் பூஜாமா.. காலையில் இருந்து மாலை வரைக்கும் மழை, வெயில்னு பாக்காம அட்டை கடில வேலை செய்தாலும் அது ஒரு கஷ்டமாவே யாருக்கும் விளங்காது சம்பளமும் 700 ரூபாதான் கிடைக்கும்'.

'அந்தக் காசு போதாதா அம்மா...' என்றாள் பூஜா. 'மாசம் முப்பது நாளும் முழு பெயர் போட்டு வேலை செஞ்சாதத்தான் முழு சம்பளமும் கிடைக்கும் எங்களுக்கு பத்து நாள் வேலைதான் அதுலயும் சாதிமதம் பார்த்தும், தங்கள அனுசரித்து போற ஆக்களுக்குத்தான் கங்காணிமாரும் உதவி செய்யிறாங்க இதுலயும் என்ன மாதிரி தனியா வாழுற பெண்களுக்கு எந்த உதவியும் இல்லை பூஜா'

'நாங்களும் டீச்சர் மாதிரி வாழ்வதற்கு என்ன செய்யணும் அம்மா?' என்றாள்.

'அதுக்கு நாங்க படுற கஷ்டத்தைப் புரிஞ்சி எந்த ஏற்றத்தாழ்வு இல்லாமல் எல்லோரையும் மதித்து உழைப்புக்கேற்ற ஊதியம் கொடுக்குறவங்க நம்மள ஆளனும் நம்ம கூட இருக்கறவங்களே இப்படி சாதிமதம்னு ஏற்றத்தாழ்வு பார்த்தா எப்படி நாம முன்னேற முடியும்.'

'சரி பூஜா நீ தூங்கு என்னை விட்டா நாள் முழுக்க பொழம்புவேன்.' என்று பெருமூச்சுடன் கூறினாள் பார்வதி. 'சரி அம்மா என்று தலையசைத்துவிட்டு நீங்களும் தூங்குங்கள்' என்றாள் பூஜா வழமைபோல் அதிகாலையில் எழுந்து பார்வதி வீட்டு வேலைகளை செய்தாள். வேலைக்குச் செல்ல தயாரானாள். பூஜா தனியாக இருப்பதால் பக்கத்து டீச்சர் வீட்டில் விட்டுட்டு செல்வது வழக்கம். அன்று பூஜாவிடம் ஓர் பரபரப்பு அங்கும் இங்குமாக ஓடிக்கொண்டிருந்தாள் இருப்பினும் அவள் முகத்தில் ஒரு தெளிவு செழிப்பும் காணப்பட்டது.

'பூஜா என்ன தேடுகிறாய்..?' 'அம்மா என்னோட புத்தகம் எங்க?' நக்கலான புன்னகையுடன் 'வழமையா பிஸ்கட் இருக்கானுதானே தேடுவ இன்று புத்தகம் தேடுகிறாய்' என்றாள்.

அதற்குப் பெருமையுடன் 'நீதானே அம்மா சொன்ன நாங்களும் டீச்சர் மாதிரி வாழ நம்ம கஷ்டம் புரிஞ்ச ஒருத்தங்க நம்மள ஆளனும் என்று அது ஏன் யாரோ ஒருத்தங்களா இருக்கணும் அந்த ஒருத்தர் உன்ர பிள்ளையாகவே இருக்கேன் அம்மா' என்றாள்.

பார்வதி பூரிப்படைந்து தன்னை அறியாமல் அழுகையுடன் பூஜாவை அணைத்துக் கொண்டாள் 'அம்மா எந்த டீச்சர் தொழிலாளி மகள் கொழுந்துதான் பறிக்கனும் என்று சொன்னாங்களோ அவங்ககிட்டயே படிச்சி பெரியாளாகிக் காட்டுறேன் அம்மா' என்றாள் பூஜா.

பூஜா சாதிப்பாளா? இல்லையா? என்பதைத் தாண்டி சாதிக்க வேண்டும் என்ற அவளது எண்ணத்தை நினைத்து வழமைக்கு மாறாக தனது முழு கஷ்டமும் தீர்ந்ததைப் போன்ற நம்பிக்கையுடன் மகிழ்ச்சி நிறைந்தவளாய் பார்வதி தேயிலைக் கூடையைத் தலையில் மாட்டிக் கொண்டு மகளின் கைகளைப் பிடித்துக் கொண்டு சென்றாள். ■

# கடத்தல்

ஓராயிரம் கரிகளின்
மிதித்தலின்
ரணத்தினை தாங்கிடும்
இருண்மை பிடித்தது

அத்தனை தந்தங்களும்
நெஞ்சுக்குள்
இரத்தம் குடிக்கின்றது

தீச் சுவாலையும்
வெப்பமும் என்னுள்
எரிந்தும் அணைந்தும்
கருகியது

மறத்தலை பூச
எனக்குள் என்னை
தேடுகிறேன்
மறத்தல் நிம்மதி
மறத்தல் அமைதி

இடியின் பின் மழையென
புயலின் பின் அமைதியென
அவன் சொன்னவை
ஆத்மத்தில் குளிர்மை
வரையும்

தூக்கம் கலைக்கும்
வன்மை தொடுத்தன
சிரிப்பை அழிக்கும்
சினம் புகுந்தன
முதுகில் குத்தும்
மனிதர் தெரிந்தனர்

வாழ்வில் பலதை

கடக்க துணியும்
பெரும் போராட்டம்
பசுமைச் சிந்தைக்காய்

பார்க்காத விழிகளில்
பசலை சூழ்ந்தன
வெய்யிலின் வெளிகளில்
ஆட்கள் போயினர்
ஒற்றை கைப்பேசியும்
நானும்
துடித்ததை அறிவாயா

விமர்சனம் தாங்கி
தொடுத்தனர் பலர்
வலியின் வீரியத்தை
அறிந்தனரோ

கடத்தல் எளிதல்ல
இதில் மறத்தலும் வருகின்
ஏற்கிறேன்

எனினும்
இருளின் தீயில்
ஒளி மெல்ல கசிகிறது
இறுதி தருணத்தில்
இறுக பற்றிட
ஒரு முத்தம் வருமென



தயாளன் சிந்திசை

# தங்கக்கூண்டு

களங்கமில்லா நிலவின் ஒளி
வந்து
காரிகையை தாலாட்டி நிற்க
கத்தும் குயிலோசைகள்
காதில்
கணீரென்று ஒலித்திருக்க
வஞ்சம் இல்லா அவற்றின்
அன்பை எண்ணி – அசதி
மறந்து
உடல் ஒய்ந்து உணர்வுகள்
ஓய்ந்திட
இரவினை எதிர்பார்த்திருந்து
இமைகள் மாத்திரம்
கனதிகள் கொண்டு

கண்கள் மூடிட
நூலிலிருந்து விடுபட்ட
பாவையின் நெஞ்சம்
தற்பொழுதுகளின்
தாவல்களை தொலைத்து
தனக்கான ஓர் உலகில்
தஞ்சம் கொள்கிறது
தங்கக் கூண்டொன்றில்
தவித்திருந்த – என்
சிட்டுக்குருவி
தன் தடையை உடைத்து
தன்னை
விடுதலை செய்கிறது

சரண்ஜா



# தொடர்கதை...

விதையாகும் முன்னே
விதை முதல்களை
கசக்கி எறிகின்ற
பாவப் பட்ட
பூமியாகிறதா
என் தேசம்
கோணேஸ்வரி தொடக்கம்
இன்றைய
இந்தச் சிறுமிவரை
தொடர்கதையாகவே..
வயிற்றுப் பசிக்கு
உணவு தேடிப் போராடும்
மக்களிடையே
தங்கள்
உடற் பசிக்காய்
பிஞ்சுக் கறி தேடி அலையும்
சில
கொடிய கேவலங்கள்
இன்னும்
எங்கள் மண்ணிலே
இந்தப் பிஞ்சு
தன்னை
அழைத்த போது



ஏனென்று அறிவாளா..?
இல்லை
தன்னை சாகடிக்கப்
போகிறார்கள்
என்று தான் அறிந்திருப்பாளா..?
மதிய உணவருந்த
என்று
எத்தனை ஆசைகளோடு
போயிருப்பாள்
வாழ்வில்
எத்தனை
சின்னச் சின்ன கனவுகள்
கண்டிருப்பாள்
ஓவியமாய் இருந்தவள்
எப்படி
அலங்கோலமாக்கப்பட்டாள்
இன்னும்
பிஞ்சுகளின் மரணம்
தொடர்கதையாகப் போகிறதா..?
பெற்றவர்களே கொஞ்சம்
பொறுப்பாக விழிப்பாக
இருங்கள்
இங்கே
புத்தன் காந்தி மட்டும்
வாழவில்லை
கொடிய
காம வெறிபிடித்த
மிருகங்கள் கூட
பசுத்தோல் போர்த்தபடி...
பெற்றவர்களே
விழிப்பாயிருங்கள்

கர்ணன் சின்னத்தம்பி

சி.உதயகுமார்



# விளங்காத கவிதை

ஒரு கவிதையில் குறியீடுகளைக் காட்டிலும் படிமம் அதிகமாகின்றபோது அக்கவிதையின் பொருள் விளங்காமல் போய் விடுகிறது.

கவிதை என்றால் குறியீடும், படிமமும் இருக்கத்தானே வேண்டும்.

புரியாத கவிதைகளையோ அதை எழுதுகின்ற கவிஞர்களையோ இப்ப யாரும் கண்டு கொள்வதில்லை.

ஆனாலும், தாங்கள்தான் முதல் தரமான கவிஞர்கள் என்ற நினைப்பு அவர்களுக்குள்ளே இருக்கவும் செய்கிறது. அதற்காக குழு சேர்ந்து பிரச்சாரம் செய்கிறார்கள். அதிலும் அவர்கள் தோற்றுப்போகிறார்கள்.

ஒரு கவிதையில் மொழி லாவகம், அழகியல் என்பவற்றோடு பொருளும் இருக்க வேண்டும். இல்லையேல் அதுவோர் இலக்கிய வகையல்ல.

“பங்கப் பழனத்துழும் உழவர்...” எனும்போது இதற்கான பொருள் யாவருக்கும் விளங்கிவிடாது.

ஏனென்றால், பங்கம் பழனம் போன்ற சொற்களுக்கான பொருள் எல்லோருக்கும் தெரிந்திருக்கச் சந்தர்ப்பமில்லை.

‘பங்கம்’ என்றால் ‘சேறு’, ‘பழனம்’ என்றால் ‘வயல்’ என்று சொல்லும் போது அதற்கான பொருளையும், கவிதையின் அழகியலையும் புரிந்துவிடுகின்றனர்.

‘பொட்டு வைத்த முகமோ
கட்டி வைத்த குழலோ
பொன்மனசரமோ
அந்தி மஞ்சள் நிலவோ..?’

‘சுமதி என் சுந்தரி ‘ திரைப் படத்தில் இடம்பெற்ற இப்பாடலின் சரணத்திலே..,

‘தரையோடு வானம்
விளையாடும் கோலம்
இடையோடு பார்த்தேன்
விலையாகக் கேட்டேன்.’

என்ற வரிகளில் கண்ணதாசனின் உவமை நயக்க வைக்கிறது.

அதாவது, வானம் தரையைத் தொடுவதுபோல தோற்றம் தருகிறது. ஆனால், தொடவில்லை என்பதும் புரியவருகிறது.

அப்படியொரு காட்சி இருப்பது போல கண்ணுக்குத் தெரிகிறது, இல்லாதது போல மனம் உணர்கிறது.

இதுபோலவே,

காதலியின் இடை இருப்பது போலவும், இல்லாதது போலவும் தோற்றுவதாக காதலன் உணர்கிறான்.

அக்காட்சியில் காதலியிடம் காதலன் பாடுவதாக கவிஞர் எழுதிய பாடல்வரிகளே மேற்படி வரிகளாகும். ■






# உலகை உலுக்கும் குரங்கம்மை தொற்று



துஷாரா

கொரோனாப் பாதிப்பிலிருந்து உலக நாடுகள் படிப்படியாக மீண்டு வருகின்ற இந்நிலையில் தற்போது குரங்கம்மை தொற்று ஐரோப்பிய நாடுகளில் பரவத் தொடங்கியுள்ளது. நாளுக்கு நாள் இதன் பாதிப்பு அதிகரித்து வருவதனால் உலகம் கலிகொண்டுள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக உலகிலுள்ள நிறுவனங்கள் பகுதியாகவும் முழுமையாகவும் மூடப்பட்டதால் 330 கோடி மக்கள் வேலையிழந்துள்ளதாக ஐ.நாவின் ஆய்வு தெரிவிக்கின்றது. இதேவேளை 50 கோடிக்கு மேற்பட்ட மக்கள் வறுமை நிலைக்கு ஆளாகுவார்கள் என பிரிட்டனை அடிப்படையாகக் கொண்ட தொண்டு நிறுவனமான ஒக்ஸ்பாம் எச்சரித்திருந்தது.



முடங்கிய பொருளாதார நடவடிக்கைகள் தற்போது மீண்டும் முன்னேற்றம் அடைந்துவரும் இந்நிலையில், ஐரோப்பிய நாடுகளில் குரங்கம்மை நோய்த்தொற்று வேகமாகப் பரவி வருவது மக்களிடத்தில் பெரும் சவாலைத் தோற்றுவித்துள்ளது. இந்த வைரஸ் தொற்று ஆரம்பத்தில் ஆபிரிக்காவில் மாத்திரமே பரவியது. அங்கு ஆறு மாதங்களில் சுமார் 1500 இற்கு மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டனர்.

ஐரோப்பிய நாடுகளான பெல்ஜியம், பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகளில் சிலருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டு பின்னர், அமெரிக்கா, அவுஸ்திரேலியா, கனடா, பிரித்தானியா, ஸ்பெயின், இத்தாலி, நெதர்லாந்து, போர்த்துக்கல், ஸ்வீடன் உள்ளிட்ட பல நாடுகளுக்கும் பரவியுள்ளது.

இதுவரை 24 நாடுகளில் பரவியுள்ள குரங்கம்மை தொற்றுநோய் காரணமாக 400 இற்கு மேற்பட்டோர் நோய்த் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இது குறித்து உலக நாடுகள் அவதானம் செலுத்த வேண்டும் என உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இளைஞர்களையும் குழந்தைகளையும் இந்த வைரஸ் தாக்கும் அபாயம் அதிகமென வைத்திய நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இந்நிலையில், குரங்கம்மை தொற்றுக்கு எதிரான தடுப்பூசி இன்னும் பயன்பாட்டில் இருப்பதாகவும், குரங்கம்மை நோய் தொடர்பாக நாட்டு மக்கள் தேவையற்ற பீதியடையத் தேவையில்லை என ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நோயெதிர்ப்பு மற்றும் உயிரணு உயிரியல் நிறுவனத்தின் பேராசிரியர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

**இதன் தோற்றம்**

குரங்கம்மை தொற்று ஒரு அரியவகை நோயாகும். ஆபிரிக்காவின் சில பகுதிகளில் விலங்குகளிடம் இருந்து மனிதர்களுக்கு இந்த நோய் பரவியது. 1958 ஆம் ஆண்டு, முதன் முதலில் ஆய்வகத்தில் உள்ள குரங்குகளிடமிருந்து கண்டுபிடிக்கப்பட்டதன் காரணத்தினாலேயே இதற்கு குரங்கம்மை என அழைக்கப்பட்டது. 1970 ஆம் ஆண்டளவில் காங்கோ நாட்டில் முதன் முதலில் மனிதர்களில் கண்டுபிடிக்கப்பட்டது.

**அதன் அறிகுறிகள்**

குரங்கம்மை தொற்று சின்னம்மையைப் போன்ற அரிய தொற்றுநோயாகும். ஆனால், சின்னம்மையைவிட அதன் தாக்கம் சற்றுக் குறைவாகக் காணப்படும். காய்ச்சல், தலைவலி, உடல்வலி, வீக்கம், முதுகுவலி, முகத்திலிருந்து தொடங்கி உடலுக்குப் பரவும் கொப்புளங்கள் போன்றவை இந்த நோயின் தொற்றுக்கான ஆரம்பகட்ட அறிகுறிகளாகும். காய்ச்சல் தொடங்கி மூன்று நாட்களுக்குள் முகத்தில் அரிப்பு ஏற்பட்டு பின்னர் கைகள், உள்ளங்கால்களுக்கு ஒவ்வாமை ஏற்பட்டு சிவப்பு நிறப்புள்ளிகள் தோன்றும். பின்னர் அவை கொப்புளங்களாக மாற்றமடைகிறது.


இந்த நோய்த்தொற்று பொதுவாக இரண்டு முதல் நான்கு வாரங்களுக்கு நீடிக்கும். பின்னர் தானாகவே மறைந்துவிடும். குரங்கம்மைக்கு தனியானதொரு சிகிச்சை எதுவும் தற்போது இல்லை. இருப்பினும் பெரியம்மை தடுப்பூசிகள் இந்த வைரஸ் பரவுவதைத் தடுப்பதில் பெரிதும் பயனுள்ளவையாக நிரூபிக்கப்பட்டுள்ளன.

**பரவும் வழிகள்**

குரங்கம்மையை ஏற்படுத்தும் வைரஸ், தோலின் மேற்புறத்தில் உள்ள உடைந்த உயிரிகள் மூலமாகவும் சுவாசக் குழாய் மூலமாகவும் கண், காது, மூக்கு பகுதிகளில் உள்ள மியூகோஸ் திசுக்கள் மூலமாகவும் குரங்கம்மைத் தொற்றினால் பாதிக்கப்பட்ட விலங்குகளிடமிருந்தும், தொற்றினால் பாதிக்கப்பட்ட விலங்குகளைத் தொடுவதன் மூலமும், அதன் உடற்திரவங்கள் மூலமும் பரவுகிறதாக விஷேட பொது வைத்திய நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு எளிதில் பரவுவதில்லை. இருப்பினும் இந்த நோயினால் பாதிக்கப்பட்டவர் உபயோகப்படுத்திய ஆடைகள், துண்டு ஆகியவற்றை உபயோகிப்பதன் மூலம் மற்றவர்களுக்குப் பரவும் வாய்ப்புள்ளது. அதேபோன்று இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் இருமும் போதும், தும்மும் போதும் வெளியாகும் நீர்த்துளிகள் மற்றவர்கள் மீது படுவதன் மூலமும் அல்லது அதை சுவாசிப்பதன் மூலமும் இந்த நோய் பரவும் அபாயம் உள்ளது. “மனிதர்களுக்கு மனிதர்கள் பரவுவது என்பது எச்சில், சளி மூலமாகவும், விலங்குகளிடம் இருந்து மனிதர்களுக்கு பரவுவது என்பது கடித்தலின் மூலமாகவும் பரவுகின்றது.”

இந்தக் குரங்குக் காய்ச்சலால் ஓரினச் சேர்க்கையாளர்கள், இரு பாலின சேர்க்கையாளர்கள் அதிகளவில் பாதிக்கப்படுகின்றார்கள் என இங்கிலாந்து, ஸ்பெயின், போத்துக்கல், கனடா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். கொரோனா வைரஸ் தொற்றுடன் ஒப்பிடும்போது இந்நோயின் பரவல் ஒப்பீட்டளவில் குறைவாகக் காணப்பட்டாலும், நெருங்கிய தொடர்பின் மூலம் இந்நோய் இலகுவாகப் பரவக்கூடியது. ஆனால், மெதுவாக இது சமூகப் பரவலாக மாறக்கூடிய அபாயம் உள்ளது.



இதைக்கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**கண்டறியும் முறை**

குரங்கம்மைத் தொற்றுக்குள்ளானவரின் உடம்பில் ஏற்பட்டுள்ள காயங்கள் அல்லது மேலோடுகளில் இருந்து பெறப்பட்ட மாதிரிகள் எடுக்கப்பட்டு கொரோனாவை அடையாளம்காண பயன்படுத்தப்படும் பீ.சி.ஆர் பரிசோதனை மூலம் இந்நோயைக் கண்டறிய முடியும். குரங்கம்மைக்கென்று குறிப்பிட்ட சிகிச்சைகள் எதுவுமில்லை.

**பரவலைத் தடுக்கும் வழிமுறைகள்**

தற்போது பல நாடுகளில் பரவி வரும் குரங்கம்மைத் தொற்றுநோய் எமது நாட்டில் பரவுவதைத் தடுக்கும் நோக்கில், அதுதொடர்பில் இலங்கை வைத்தியசாலை அமைப்பு வைத்தியர்களுக்கு தெளிவுபடுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். குறிப்பாக, குரங்கம்மைக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட வெளிநாட்டுப் பிரஜைகள் மற்றும் எமது நாட்டவர்கள் விமான நிலையம் ஊடாக எமது நாட்டிற்குள் பிரவேசிக்க முயற்சிக்கும்போது அவர்களை அடையாளம்காண விமான நிலையத்தில் அதற்கான வைத்திய பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு முன்னெடுக்கின்றபோது, விமான நிலையத்தில் குரங்கம்மை தொற்றின் அறிகுறிகளுடன் வருகின்றவர்களைக் கண்டறிய முடியும்.

இந்த நோய்ப் பரம்பலைக் கட்டுப்படுத்த விரைவான நடவடிக்கை தேவையாக இருக்கிறது. தடுப்பூசியும் மறையான சிகிச்சையும் இதற்கு ஒரே தீர்வு. பாதிக்கப்பட்டவர்களை கண்டுபிடித்து தனிமைப்படுத்துவதே இதன் பரவலைத் தடுப்பதற்கான முதற்கட்ட நடவடிக்கையாகும். இதன் மூலம் எம்நாட்டுக்கு பரவவுள்ள இத்தொற்றைத் தடுக்க முடியும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

மேற்குறிப்பிடப்பட்ட அறிகுறிகள் யாருக்காவது தென்பட்டால் தாமதியாது உடனடியாக வைத்திய சிகிச்சையைப் பெற்றுக்கொள்ளுமாறு தொற்றுநோய்ப் பிரிவு பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது. தரமற்ற மருத்துவ சேவையைப் பெறும் 10 நபர்களில் ஒருவர் இந்த நோயினால் இறக்க வாய்ப்புள்ளதாக உலக சுகாதார நிறுவனம் மேற்கொண்ட ஆராய்ச்சி முடிவுகளில் கண்டறியப்பட்டுள்ளது. இருப்பினும், இந்த நோயினால் பாதிக்கப்படுபவர்கள் முறையான சிகிச்சையை மேற்கொண்டால் ஒரு சில வாரங்களில் குணமடைந்துவிடலாம்.

குரங்கம்மைத் தொற்றுக்குள்ளான எந்த நோயாளர்களும் எமது நாட்டில் இதுவரை இனங்காணப்படவில்லை. இருந்தாலும், இத்தொற்று நோய் பரவும் விடயத்தில் மிக அவதானமாக இருந்து கொள்வதுடன் அரசும், சுகாதாரத்துறையினரும் காட்டுகின்ற வழிகாட்டுதல்களுக்கமைய செயற்பட்டால் மாத்திரமே இந்நோயிலிருந்து எம்மையும் இளம் சமூகத்தினரையும் பாதுகாத்துக் கொள்ளலாம்.

■


+94770691883
contact@palakai.lk
Palakai.LK
வட - கிழக்கின் விளம்பரப்பலகை
Home
Popular Stores
Register
Contact
Post Your Ad
பலகை
Select Location
Select Category
Enter Keyword here ...
Search
வேண்டுகோள்
அனைத்து தமிழ் மக்களும் தமிழில் பேசி நேரடியாக நன்மையடைய வேண்டும் என்பதற்காகவே இத்தளம் முற்றிலும் இலவசமாக உருவாக்கப்பட்டுள்ளது. தயவு செய்து நியாயமானதும் உண்மையானதுமான விளம்பரங்களை மட்டுமே இங்கே பதிவிடுங்கள்
Palakai.LK
16,238 likes
Like Page
Share
Ask Us To Post Your Ads On our Facebook
Mobile Apps
எங்களது iphone மற்றும் android Apps ஐ பதிவிறக்குவதன் மூலம் இலகுவாக உங்கள் விளம்பரங்களை பதிவேற்ற மற்றும் கையாள முடியும்.
பதிவிறக்க
வீட்டில் இருந்து கொண்டே விற்கவும்! வாங்கவும்!
Palakai.LK
வட - கிழக்கின் விளம்பரப்பலகை
முதல் முறையாக ஓர் இலவச
தமிழ் இணையம்
வட-கிழக்கின் விளம்பர பலகை
Palakai.LK
0770691883
ANDROID APP ON
Google play
Download on the
App Store




# தொலைந்த போனைக் கண்டு பிடிப்பது

க.கரிகரன்

நாம் அனைவரும் இன்று தொழில்நுட்ப உலகிலேயே வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம் இல்லாவிட்டால் தொழில்நுட்ப உலகில் சிக்கித் தவிக்கிறோம் என்றே சொல்லவேண்டும். உலகினையே கைக்குள் உள்ளடக்கக் கூடிய வகையில் தொழில்நுட்பம் வளர்ந்துள்ளது.

தற்போதைய இலங்கையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை முதல் சாதாரண தரம், உயர்தரம், உயர்கல்வி என்ற அனைத்திலுமே நாம் தொழில்நுட்ப உதவியுடன் (Smart phone) கல்வியைக் கற்று வருகின்றோம்.

இந்த 21 ஆம் நூற்றாண்டில் கோல் வந்தால் பச்சை வட்டத்திலும் கோல் கட்பண்ண சிவப்பு வட்டத்திலும் அமுத்தும் சமூகம் எம்மோடு பின்னிப் பிணைந்தே வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்கள் என்றால் ஆச்சரியப்பட வேண்டிய விடயம்தான்.

எமது அன்றாட சொந்த விடயமாக, அலுவலக விடயங்கள், நண்பர்கள், உறவினர்கள் அனைவருடைய தகவல்களையும் எமது தொலைபேசியிலேயே அதிகம் சேமித்து வைத்துள்ளோம். அதற்கு அடிமையாகி விட்டோம் என்று கூறலாம்.

எம்மில் பலர் ஸ்மாட்போனில் இன்ரனல் மெமரியிலேயே தங்கள் விடயங்களை அதிகம் சேமித்து வைத்துள்ளனர். அது எமக்கு எந்த வகையிலும் பாதுகாப்பானது அல்ல. எனவே, நாம் எமது google account இல் சேமித்து வைப்பது எப்போதும் எமக்குப் பாதுகாப்பாக இருக்கும். போன் நம்பர் முதல் புகைப்படங்கள், ஆவணங்கள் அனைத்தையும் சேமித்து வைக்கக் கூடிய வழி உள்ளது.

வேலைப்பழு, கவனமின்மை காரணமாக எமது ஸ்மாட்போனை நாம் கைதவற விட்டாலோ, திருடப்பட்டாலோ எவ்வாறு அதனைக் கண்டுபிடிப்பது அல்லது அதில் உள்ளது எமது தகவல்களைப் பாதுகாப்பாக பேணுவது - தகவல்கள் மற்றவர்களிடம் செல்லாது எப்படி பாதுகாப்பது - அழிப்பது என்பவை எம்மில் பலருக்குத் தெரியாமல் உள்ள விடயமாகும். அந்த ஸ்மாட்போனில் பல்வேறு புகைப்படங்கள், வீடியோக்கள் மேலும் பல தரவுகளைச் சேமித்து வைத்திருப்போம்.

எனவே, ஸ்மார்போன் தொலைந்து போவதை நிச்சயம் நம்மால் தாங்கிக் கொள்ள முடியாது. இப்படியான நிலையில், தொலைந்து போன ஸ்மாட்போனை எளிதாகக் கண்டுபிடிக்கவும் கண்டுபிடிக்க முடியாவிட்டாலும் அதில் உள்ள தரவுகளை எப்படி அழிப்பது என்பதைப் பற்றியும் விரிவாக இங்கே பார்க்கலாம்.




தொலைந்து போன ஸ்மாட்போனைக் கண்டு பிடிக்க முதலில் நீங்கள் android.com/find என்கிற லிங்கைக் கிளிக் செய்து உள்நுழைய வேண்டும். இதில் உங்களின் கூகுள் எக்கவுண்டை பயன்படுத்த வேண்டும். அடுத்ததாக, உங்களின் மொபைல் பற்றிய தகவல்கள் மேல் புறத்தில் தோன்றும்.



பிறகு தொலைந்து போன மொபைலில் நீங்கள் லொக்கின் செய்துள்ள Google அக்கவுண்ட் விபரத்தை உள்ளிடவும். பிறகு தொலைந்து போன மொபைலில் நோட்டிபிகேசன் வரும்.

பின்னர், திரையில் காணப்படும் மப் மூலம் உங்கள் மொபைல் எங்கே உள்ளது என்பதை அறிய முடியும். அதாவது, கடைசியாக உங்கள் மொபைல் எங்கு இருந்ததோ அந்த இடத்தின் லொகேசன் அதில் காட்டப்படும். ஒருவேளை அந்த இடத்தில் மொபைல் இல்லையென்றால் உடனடியாக Lock and erase என்கிற அப்ஸினை எனேபிள் செய்து விடவும்.

உங்கள் மொபைலில் ஒன்னில் இருந்தால் 5 நிமிடம் ரிங் அடிக்கப்படும். இதை Play Sound என்கிற அப்ஸைப் பயன்படுத்தி செய்யலாம். உங்கள் மொபைலை லொக் செய்வதற்கு secure device find my phone என்பதைக் கிளிக் செய்யவும். இதன் மூலம் உங்களின் பின் நம்பர் அல்லது பாஸ்வேர்டு லொக் ஆகிவிடும்.

மேலும், ஒருவேளை தவறுதலாக மொபைல் வேறு யாரிடமோ சென்று விட்டால் அதை உங்களிடம் திருப்பி அனுப்ப நீங்கள் ஒரு மெசேச் அனுப்பிப் பார்க்கலாம். உங்களின் தொலைந்து போன மொபைலில் உள்ள தரவுகள் அனைத்தையும் முற்றிலுமாக அழிப்பதற்கு Erase device என்கிற அப்ஸைக் கிளிக் செய்து போனில் உள்ள எல்லாவற்றையும் அழித்து விடலாம். ஆனால், மெமரி காட்டில் உள்ள தரவுகளை அழிக்க இயலாது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

ஒருவேளை உங்கள் தரவுகளை அழித்த பிறகு மொபைல் உங்களுக்குக் கிடைத்து விட்டால், உங்கள் கூகுள் அக்கவுண்ட் லொக்கின் செய்து சில தரவுகளைப் பெறலாம்.

**Android மூலம் கண்டு பிடிப்பது:**

தொலைந்து போன உங்கள் மொபைலை அன்ரோயிட்டின் உதவியுடன் கண்டுபிடிக்கலாம். இதற்கு Find My Device என்கிற செயலியை திறந்து கொள்ளவும். ஒருவேளை தொலைந்து போன மொபைலில் இந்த அப் இல்லையென்றாலும் பிரச்சினை இல்லை.

இந்தச் செயலியில் லொக்கின் செய்து Continue என்பதைக் கிளிக் செய்யவும். அடுத்து உங்களின் பெயரை ரைப் செய்யவும். உங்கள் பெயரை குறிப்பிடுங்கள். இறுதியாக மேற் சொன்ன முறைகளை இவற்றிலும் செய்தாலே போதும்.

மேலும், போனை Google Map உதவியுடன் டிராக் செய்வதன் மூலம் கூடுதலாகக் கண்டுபிடிக்க முடியும்.

கூகுள் மப்ஸ் மூலம் நீங்கள் தவற விட்ட ஸ்மாட்போனினை ரைம் லைன் மூலம் டிராக் செய்ய முடியும். அதற்கான சில படிமுறைகள்:-

▶ முதலில் ஸ்மாட்போன் அல்லது கணினியில் www.maps.google.co.இன் வலைத்தள முகவரிக்கு செல்ல வேண்டும்.

▶ தவறவிட்ட ஸ்மாட்போனில் லின்க் செய்யப்பட்டிருந்த கூகுள் அக்கவுன்ட் மூலம் லொக்கின் செய்ய வேண்டும்.

▶ வலதுபுறம் மேல்பக்கம் காணப்படும் மூன்று புள்ளிகளைக் கிளிக் செய்ய வேண்டும்.

▶ அடுத்து 'Your timeline' அப்ஸ் தேர்வு செய்ய வேண்டும்.

▶ இங்கு உங்களது சாதனத்தில் இருக்கும் தகவல்களில் ஆண்டு, மாதம் மற்றும் திகதி உள்ளிட்ட விபரங்களை பதிவிட வேண்டும்.

▶ உங்களது சாதனத்தின் லொக்கேசன் விபரங்களை மப்பில் தற்போதைய லொக்கேசனுடன் காண்பிக்கும். ■

# சமுதாய சீர்கேடும்...

(04 ஆம் பக்கத்தொடர்ச்சி)

ஆனால், போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களுடைய எதிர்பார்ப்புக்கு அமைவாகப் புதிய அரசாங்கம் உருவாக்கப்படவில்லை. மாறாக மக்கள் யாரை வெறுத்தார்களோ அவர்களை பொதுஜன பெரமுன கட்சியைச் சேர்ந்தவர்களின் பெரும்பான்மை பலத்துடனேயே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் அரசாங்கம் நிலைபெற்றிருக்கின்றது.

மேற்குலக நாடுகளின் நட்புநிலை ஆளுமை கொண்டவராகக் கருதப்படுகின்ற ரணில் விக்கிரமசிங்கவின் பொருளாதார நெருக்கடி முகாமைத்துவ ஆட்சிக்கு எதிர்க்கட்சியினர் கொள்கையளவில் மட்டுமே ஆதரவளித்திருக்கின்றனர். அதாவது, அவருடைய முன்னேற்றகரமான செயற்பாடுகளுக்குத் தங்களுடைய ஆதரவை அவர்கள் வெளிப்படுத்தி இருக்கின்றனர். இந்த ஆதரவு மாத்திரம் பொருளாதார நெருக்கடிகளைச் சீர் செய்யவும் மக்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும் வழிவகுக்க மாட்டாது.

இந்த ஆதரவென்பது அரசியல் நலன் சார்ந்தது. கட்சி அரசியல் செயற்பாட்டை முதன்மையாகக் கொண்டது. சீர்குலைந்துள்ள பொருளாதாரத்தைத் தட்டி நிமிர்த்துவதற்கு உதவமாட்டாது. நிமிர முடியாமல் நெருக்கடிகளில் சிக்கித் தடுமாறுகின்ற அரசாங்கத்தை உறுதியாக நிலைப்படுத்துவதற்கு அரசியல் நலன்களுக்கு அப்பாற்பட்ட உளப்பூர்வமான செயற்பாடுகளே அவசியம். அதுவும் கடின உழைப்பை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டியது அவசியம். அத்தகையதொரு நிலைமைக்கு எதிர்க்கட்சியினரும் சரி, ஆளும் கட்சியினராக மீண்டும் பரிணமித்துள்ள பொதுஜன பெரமுனக் கட்சியினரும் சரி தயாராக இல்லை.

இந்த நிலையில் மக்களுடைய ஆட்சி மாற்றக் கோரிக்கை ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் அமைக்கப்பட்டதன் மூலம் நிறைவேற்றப்பட்டிருப்பதான ஒரு தோற்றத்தைக் காட்ட அரசதரப்பினர் முனைந்திருக்கின்றனர். இந்த அரசாங்கத்தை ஒரு சர்வ கட்சி அரசாங்கம் என்று நிறுவுவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

பொருளாதார நெருக்கடிகளைச் சீர்செய்வதற்கான முயற்சிகளை ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டிருக்கின்றார் என்பதை மறுக்க முடியாது. அத்தகைய முயற்சி நோக்கிலான சில நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டிருக்கின்றார். இதனை மறுப்பதற்கில்லை. ஆனால், இலங்கையின் பொருளாதார நெருக்கடி - பொருளாதாரப் பிரச்சினை என்பது ஒரு கூட்டுப் பிரச்சினை. அது முக்கியமாக அரசியல் நெருக்கடியுடன் இறுக்கமாகப் பின்னிப் பிணைந்திருக்கின்றது.

நாட்டில் அரசியல் உறுதிப்பாட்டை - அரசியல் ஸ்திரத்தன்மையை உருவாக்க வேண்டியது முக்கியம். அது தவிர்க்க முடியாததோர் அடிப்படைத் தேவை. அந்த வகையில் அதற்குத் தீர்வு காண்பதற்குப் பல முனைச் செயற்பாடுகள் அவசியம். அத்தகைய பல முனைச் செயற்பாடுகள் நாட்டில் முனைப்புடன் முன்னெடுக்கப்படுகின்றதா என்பதே இப்போதைய முக்கிய கேள்வி.

தீர்க்கப்பட வேண்டிய பல எரியும் பிரச்சினைகளினால் மக்களுடைய உள்ளங்கள் வெந்து கொண்டிருக்கின்றன. நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க முடியாமலும் தீர்வு காண முடியாமலும் மக்கள் அல்லோலகல்லோலப்படுகின்றார்கள்.

ஆனால், பாராளுமன்றத்திலும் நாட்டின் ஆட்சி அரசியலிலும் இந்த நிலைமை பிரதிபலிக்கவில்லை. அது நாட்டின் யதார்த்த நிலைமைகளில் இருந்து விலகி வேறோர் உலகத்தில் இருப்பது போன்ற நிலைப்பாட்டிலேயே அங்கு இடம்பெறுகின்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. இத்தகைய ஆட்சிப் போக்கும் அரசியல் நிலைப்பாடும் நாட்டையும் மக்களையும் நெருக்கடி நிலைமைகளில் இருந்து மீட்பதற்கு ஒதுபோதும் உதவமாட்டாது. ■

# இணக்கத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, செந்தில் தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்கு கூட்டணி, ரவூப் ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ரிஷாட் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், பாட்டாலி சம்பிக்க ரணவக்க தலைமையிலான 43 ஆம் படையணி உள்ளிட்ட சுயாதீன அணிகள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கூட்டத்தில் பங்கேற்றிருந்தன.

அனுரகுமார திஸாநாயக்க தலைமையிலான ஜே.வி.பி பங்குகொள்ளவில்லை. ஆனால், திருத்தங்களை நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவுக்கு அனுப்பியுள்ளதாக ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

சர்வஜன வாக்கெடுப்புக்கு வழி வகுக்காத முறையில், பாராளுமன்றத்தில் கூடிய விரைவில் அங்கீகரிப்பதெனக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. நகல் வரைபு தொடர்பாக கட்சித் தலைவர்களின் கருத்துக்களை அறிவதற்காகவே கூட்டம் நடத்தப்பட்டதாக ரணில் விக்கிரமசிங்கவின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

19 ஆவது திருத்தச் சட்டத்தில் இருந்த ஏற்பாடுகளை மேலும் வலுப்படுத்தும் முறையிலேயே 21 அமைய வேண்டும். ஆனால் 19 பிளஸ் என்பதற்கு பதிலாக 19 மைனஸ்தான் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதனை ஏற்க முடியாதென ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, கூட்டத்தில் ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் காரசாரமாகச் சுட்டிக்காட்டினார்.

19 பிளஸ் என்ற முறையிலேயே 21 ஆவது திருத்தம் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். இதனை ஏனைய சிங்கள கட்சிகளின் தலைவர்களும் ஏற்றுக் கொண்டனர்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான குறைந்தபட்ச அதிகாரப் பரவலாக்கமான 13 ஆவது திருத்தச்சட்டத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தாத வகையிலேயே 21 ஆவது திருத்தச் சட்டம் அமைய வேண்டுமென தமிழ் முற்போக்கு முன்னணி உள்ளிட்ட மலையகத் தமிழ்க் கட்சிகள் வலியுறுத்தின.

இரட்டைக் குடியுரிமை உடையவர்கள் பாராளுமன்றம் வருவதற்குத் தடை விதிக்கும் ஏற்பாட்டில் தளர்வுப் போக்கை கடைப்பிடிக்கக் கூடாதெனச் சில சிங்களக் கட்சிகளின் பிரதிநிதிகள் எடுத்துக் கூறினர். அத்துடன் இரட்டை குடியுரிமை உடையவர்கள் அரச நிர்வாகத்தில் உயர் பதவிகளை வகிப்பதற்கும் தடை விதிக்கப்பட வேண்டும் எனவும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

திருத்தங்கள் உரிய முறையில் அமைய வேண்டுமெனவும் இல்லையேல் சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்படும் என்றும் சிங்கள எதிர்க்கட்சிகள் கூட்டத்தில் எச்சரிக்கை விடுத்தன.

கூட்டத்தில் பங்குகொள்ளாத கட்சிகளையும் உள்ளடக்கி மற்றுமொரு கட்சித் தலைவர்கள் கூட்டத்திற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களைக் குறைக்கும் 21 ஆவது திருத்தச் சட்டத்துக்கான நகல் வரைபைத் தயாரிக்கும் விடயத்தில், இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கமும், ரணில் விக்கிரமசிங்க நியமித்த குழுவும் கடும் வாதப்பிரதிவாதங்களில் ஈடுபட்டுள்ளன.

அமைச்சர் மூத்த சட்டத்தரணி விஜயதாச தலைமையிலான குழு சமர்ப்பித்துள்ள பரிந்துரைகள், 20 ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள ஜனாதிபதியின் சில அதிகாரங்களை அப்படியே பேணுவதாகச் சட்டத்தரணிகள் சங்கம் குற்றம் சுமத்துகின்றது.

சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சாலிய பீரிஸ் தலைமையிலான குழு சென்ற வியாழக்கிழமை நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவைச் சந்தித்து உரையாடியுள்ளார்.

குறிப்பாக, இரண்டரை வருடங்களில் பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம், அமைச்சுப் பொறுப்புக்களை ஜனாதிபதி வைத்திருக்கும் அதிகாரம் உள்ளிட்ட சில விடயங்கள் 21 இற்கான நகல் வரைபில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாகவே சட்டத்தரணிகள் சங்கம் வாதிடுகின்றது.

இந்தவொரு நிலையில், ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சை வைத்திருக்கலாம் என்பது தொடர்பாக நகல் வரைபைத் தயாரிக்கும் அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தலைமையிலான குழு தற்போது ஆராய்ந்து வருவதாகவும் கொழும்பு உயர்மட்டத் தகவல்கள் கூறுகின்றன.

ஆனாலும் 2016 ஆம் ஆண்டு மைத்திரி- ரணில் அரசாங்கத்தில் அமுல்படுத்தப்பட்ட 19 ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள பாராளுமன்றத்தில் நிறைவேற்று அதிகாரங்களைப் பலப்படுத்தும் சரத்துகளும் உண்டு.

குறிப்பாக, இரட்டை குடியுரிமையுடையவர் இலங்கை பாராளுமன்றத்தில் உறுப்பினராகப் பதவி வகிக்க தகுதியற்றவர் என 21ஆவது திருத்தத்துக்கான நகல் வரைபின் 91 (1) (xiii) உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் 19 ஆவது திருத்தத்தில் உள்ள ஆணைக் குழுக்கள் மீண்டும் சுயாதீனமாகச் செயற்படும் வகையிலான ஏற்பாடுகளும் உண்டு. 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் 20ஆவது திருத்தத்தில் நீக்கப்பட்ட தேசிய பெறுகை ஆணைக்குழு, கணக்காய்வு சேவை ஆணைக்குழு ஆகியவற்றை மீண்டும் செயற்படுத்தும் நோக்கில் அதிகாரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ள லஞ்ச ஊழல் ஆணைக்குழு, அரச சேவை ஆணைக்குழு, தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு, பொலிஸ் ஆணைக்குழு ஆகிய பிரதான ஆணைக்குழுக்கள் சுயாதீனமான முறையில் செயற்படும் வகையில் 21ஆவது திருத்தச் சட்ட வரைபில் திருத்தங்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

சுயாதீன ஆணைக் குழுக்களுக்கும், அரசியலமைப்புப் பேரவைக்கும் மற்றும் அமைச்சரவைக்கும் பகிர்ந்தளிப்பதனால் நிறைவேற்று அதிகாரம் உள்ள ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்படுகின்றன. அமைச்சரவை அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் நியமனத்தின் போது பிரதமரின் ஆலோசனைகளை ஜனாதிபதி கேட்க வேண்டுமென்ற கட்டாயமும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

சுயாதீன ஆணைக்குழுக்களை நியமிக்கும் அரசியலமைப்புப் பேரவையில் ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவரும் அங்கம் வகிப்பர். இவர்களுடைய ஆலோசனையின் பிரகாரம் ஐந்து உறுப்பினர்களின் பெயர்கள் சுயாதீன ஆணைக்குழுக்களுக்காகப் பிரேரிக்கப்படும். ஜனாதிபதி அதற்குரிய நியமனத்தை வழங்குவார்.

பெயர் குறிப்பிடப்படும் ஐவரில் இருவர் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருப்பர். ஏனைய மூவரும் துறைசார்ந்தோராக இருப்பர்.

இந்த அரசியலமைப்புப் பேரவையின் ஆலோசனையின் படியே ஜனாதிபதி சுயாதீன ஆணைக்குழுக்களின் தலைவர்களையும் ஆணைக்குழுக்களின் உறுப்பினர்களையும் நியமிக்க வேண்டும். தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு, அரச சேவை ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு, கணக்காய்வு சேவை ஆணைக்குழு, இலங்கை மனித உரிமை ஆணைக்குழு, லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு, நிதி ஆணைக்குழு, எல்லை நிர்ணய ஆணைக்குழு, தேசிய பெறுகை ஆணைக்குழு ஆகிய சுயாதீன ஆணைக்குழுக்கள் நியமிக்கப்படவுள்ளன.

இதற்கான பரிந்துரை 21 ஆவது திருத்தத்துக்கான நகல் வரைபில் முன்வைக்கப்பட்டுள்ளன.

சட்டமாதிபர், மத்திய வங்கியின் ஆளுநர், கணக்காளர் நாயகம், பொலிஸ்மா அதிபர், குறைகேள் அதிகாரி மற்றும் பாராளுமன்றச் செயலாளர் நாயகம் ஆகிய உயர் பதவிகளுக்கான நியமனத்தின் போதும் ஜனாதிபதி அரசியலமைப்புச் சபையின் ஆலோசனைகள் எதுவுமின்றிச் செயற்பட முடியாது.

இந்தப் பரிந்துரைகள் 19 ஆவது திருத்தச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளதன் பிரகாரமே 21 ஆவது திருத்த நகல் வரைபில் உள்ளடங்கப்பட்டுள்ளது.

ஆனால், அரசியலமைப்புப் பேரவையில் ஐந்து உறுப்பினர்களை நியமிக்கும் விடயத்தில் ஜனாதிபதிக்கு இருக்கும் அதிகாரம் ஐவர் கொண்ட அரசியலமைப்புப் பேரவையைச் சுயாதீனமாக செயற்பட அனுமதிக்குமா? என்பது கேள்வியே.

அதேவேளை, அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தலைமையிலான குழு முன்வைத்துள்ள நகல் வரைபு யோசனைகளிலும் இலங்கைச் சட்டத்தரணிகள் முன்வைத்துள்ள பரிந்துரைகளிலும் மாகாண சபைகளுக்கான ஆளுநர்கள் நியமனம் பற்றிக் குறிப்பிடப்படவில்லை.

20 மற்றும் 19 ஆவது திருத்தச் சட்டத்தில் மாகாணங்களுக்கான ஆளுநர்களை ஜனாதிபதி தனது நிறைவேற்று அதிகாரங்கள் மூலமே நியமித்திருந்தார். இதனால் வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்குத் தெரிவு செய்யப்படும் ஆளுநர்கள் ஜனாதிபதியின் விசுவாசிகளாகவும் இலங்கை ஒற்றையாட்சி அரசின் கொள்கைகளை நிறைவேற்றுவோராகவுமே செயற்பட்டு வந்தனர்.

ஆகவே, 21 ஆவது ஆகவே திருத்தச் சட்ட நகல் வரைபில் மாகாண ஆளுநர்களின் நியமனங்களை அரசியலமைப்புப் பேரவையின் மூலமாகத் தெரிவு செய்யும் முறை அல்லது மாகாண முதலமைச்சர்களின் பரிந்துரைகளின் அடிப்படையில் ஆளுநர்களை நியமிக்கும் முறையை அறிமுகம் செய்திருக்கலாம். ஆனால், அது குறித்த பரிந்துரைகள் எதுவும் நகல் வரைபில் இல்லை.

21 ஆவது திருத்த நகல் வரைபு எழுபது ஆண்டு கால இனப்பிரச்சினைக்குத் தீர்வு அல்ல.

ஆனாலும் அந்தத் திருத்தத்திற்குள் உட்புகுத்தப்பட்டுள்ள சுயாதீன ஆணைக்குழுக்கள் போன்று மாகாண ஆளுநர்கள் நியமன முறையிலும் சுயாதீனத் தன்மையைப் புகுத்தியிருக்கலாம். ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச, பாட்டாலி சம்பிக்க ரணவக்க மற்றும் சட்டத்தரணி விஜயதாச ராஜபக்ஷ ஆகியோருக்கு எதிர்காலத்தில் ஜனாதிபதியாக வேண்டுமென்ற கனவுகள் இருப்பதால், 19 ஆவது திருத்தச் சட்டத்தைப் போன்று 21 ஆவது திருத்தச் சட்டத்தையும் அங்கீகரித்து, நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறைமையைப் பாதுகாப்பதே பிரதான நோக்கம் என்பது இன்று இடம்பெற்ற கூட்டத்தில் தெளிவாகியிருக்கின்றன. ■

**இரட்டை குடியுரிமையுடையவர் இலங்கை பாராளுமன்றத்தில் உறுப்பினராகப் பதவி வகிக்க தகுதியற்றவர் என 21 ஆவது திருத்தத்துக்கான நகல் வரைபின் 91 (1) (xiii) உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.**



# உலகக்கிண்ணக் கனவை தக்கவைத்தது உக்ரைன்

கிளாஸ்கோ ஹேம்ப்டன் பார்க் மைதானத்தில் நடைபெற்ற உணர்ச்சிபூர்வமான தகுதிச் சுற்று ப்ளே-ஆஃப் அரையிறுதி ஆட்டத்தில் உக்ரைன் அணி 3 - 1 என்ற கோல் கணக்கில் ஸ்கொட்லாந்தை வீழ்த்தி உலகக் கிண்ணக் கனவை உயிரோடு வைத்திருக்கிறது.

உக்ரைனில் நடக்கும் போரின் பின்னணியில் விளையாடப்பட்ட இந்த விளையாட்டு, ஸ்கொட்டிஷ் ரசிகர்களின் ஒற்றுமையை வெளிப்படுத்தும் நிகழ்ச்சியுடன் தொடங்கியது. உக்ரைன் மீது படை எடுத்ததால் உலகக்கிண்ணப் போட்டியில் இருந்து ரஷ்யா நீக்கப்பட்டது.

டிசம்பரில் குளிர்கால இடைவேளைக்காக உள்நாட்டு லீக் நிறுத்தப்பட்ட பின்னர் இந்த ஆண்டு ஒரு போட்டியிலும் உக்ரைன் விளையாடவில்லை. ரஷ்யாவின் படையெடுப்பிற்குப் பிறகு உக்ரைன் மக்கள் அகதியாக அலைவதால் விளையாட்டை நினைத்தும் பார்க்கவில்லை.

ஸ்கொட்லாந்தின் 39 வயதான கோல்கீப்பர் கிரெய்க் கார்டன் தனது சொந்த அணியை ஆட்டத்தில் தக்க வைக்க பல கோல்களைத் தடுத்தார். வெஸ்ட் ஹாம் முன்கள வீரர் அன்றி யர்லொலென்கொ முதல் பாதியில் கோல் அடித்து அணிக்கு முன்னிலை அளித்தார், மேலும், அவர்கள் இரண்டாவது பாதியின் தொடக்கத்தில் டையில் தங்கள் பிடியை வலுப்படுத்தினர். பென்ஃபிகாவின் ரோமன் யாரெம்சுக் அதை 2-0 என முன்னிலைப்படுத்தினார்.

ஸ்கொட்லாந்து விளையாடுவதற்கு சுமார் 10 நிமிடங்களில் கோல் அடித்தது. ஆனால், கூடுதல் நேரத்தில் ஆர்டெம் டோவ்பிக்கின் கோலால் உக்ரைன் 3-1 என வெற்றி பெற்றது.

உலகக் கிண்ணப் போட்டியில் இடம்பிடிப்பதற்காக ஜூன் 5 ஆம் திகதி கார்டிஃப் சிட்டி ஸ்ரேடியத்தில் வேல்ஸை எதிர்கொள்கிறது உக்ரைன். வெற்றி பெறும் அணி இங்கிலாந்து, ஈரான் மற்றும் அமெரிக்காவுடன் குரூப் டீ இல் இணையும்.

உக்ரைனின் உலகக் கோப்பை சவால் அதன் குடிமக்களைச் சுருக்கமாக வசீகரித்தது. ஆனால், போர் முக்கியமானது.

உக்ரைனியர்களுக்கு, தொண்ணூறு நிமிட கால் பந்தானது அவர்கள் அறிந்த வாழ்க்கையைப் பற்றிய ஒரு சுருக்கமான சாளரத்தையும் அவர்களின் போராட்டத்தை தலைப்புச் செய்திகளில் வைத்திருக்க ஒரு வாய்ப்பையும் வழங்கியது.

முந்தைய நாள், மஞ்சள் மற்றும் நீல பயண ஆதரவு ஸ்கொட்லாந்தின் தேசிய மைதானத்திற்குச் சென்றதால், போரைப் பற்றிய எண்ணங்கள் வெகு தொலைவில் இல்லை.

இது வழக்கமான காற்பந்து ஆதரவாளர்கள் பஸ் அல்ல. ஆனால், இது ஒரு பொதுவான காற்பந்து கூட்டம் அல்ல.

நடால்யா, தான் ஒரு காற்பந்து ரசிகன் இல்லை என்றும் இது தான் கலந்து கொண்ட இரண்டாவது போட்டி என்றும் ஆனால், “இது எனக்கு என் நாட்டின் ஒரு பகுதி” என்றும் கூறினார். உக்ரைனியர்கள் ஒன்று கூடி ஒரு நாட்டின் கவனத்தையும் பெருமையையும் பகிர்ந்து கொள்ள இது ஒரு சந்தர்ப்பமாகும்.

ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் அவுஸ்திரேலியா,அமெரிக்கா ஆகிய அந்நாடுகளில் இருந்தும் உக்ரைனிய ரசிகர்கள் போட்டியைப் பார்க்கச் சென்றார்கள். ■



இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 04.06.2022 அன்று வெளியிடப்பட்டது.